தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர் சுரு	திருவள்ளுவர் யாண்டு உயஎக சௌமிய, பங்குனி (1970 — மார்ச்சு — ஏப்ரல்)	மலர் கஉ

இரண்டு தமிழ்ப் பாடல்கள்

திரு. சாலை. இளந்திரையன் எம். ஏ., எம். லிட்.

ஓர் ஆணும் ஒரு பெண்ணும் ஒருவரை ஒருவர் விரும்புவதற்கு (காதலிப்பதற்கு) அவ்விருவரின் இனம், சாதி, மதம், அவர்கள் வாழும் இடம் என்பவை ஒன்ருக இருக்கவேண்டும் என்ற கட்டாயம் இல்லை. ஆனுல், திருமணம் என்னும் உறவினுல், பிணைக்கப்பட்டுச் சமுதாயத்தில் ஒரு குடும்பமாக அவர்கள் வாழ்வதற்கு மேற்குறித்தவைகளில் ஒருமைப்பாடு தேவையாகவே இருக்கிறது, சாதி, மதம், நாடு போன்றவற்ருல் மக்கட் சமுதாயம் பலவாகப் பிரிந்து கிடக்கும் இன்றைய நிலைதான் இப்படி என்பதில்லை; இவ்வளவு பல பிரிவுகள் இருந்திராததாகத் தோன்றுகிற நமது பழந்தமிழ்ச் (சங்க காலச்) சமுதாயத்திலும் இந்தவிதமான தடை இருந்திருப்பதாகவே தெரிகிறது.

சங்கச் சமுதாயம்

சங்கத்தமிழ் இலக்கியம் பெரும்பாலும் ஒருணர்ச்சிப் பாடல் களாகவே இருப்பதால், அதனைக்கொண்டு, அக்காலச் சமுதாயத் தின் ஒரு முழுமையான சித்திரத்தை நாம் வரைந்துகொள்ள இயலவில்லை. அங்கொன்றும், இங்கொன்றுமாகக் கிடைக்கும் விவரங்களைக்கொண்டு நாம் வரையும் சமுதாயச் சித்திரம் ஒவ்வொரு பகுதியில் ஒவ்வொரு விதமாக இருக்கிறது.

முடியுடை மன்னர்களைப் பற்றிப் படிக்கின்றபோது, அன்றைத் தமிழகம் மூன்று நாடுகளாகப் பிரிந்திருந்தது என்றும், ஒவ்வொரு நாடும் கிராமிய மற்றும் பட்டண நாகரிகங்களை வளர்த்திருந்தது என்றும் உணர்கிருேம்; ஒரு நாட்டின் எல்லைக்கு உட்பட்ட மக்களிடையே சாதிப்பிரிவோ மதப்பிரிவோ வேறு பிரிவுகளோ

இருந்திருக்க மாட்டா என்பது போலவும் தோன்றுகிறது. அகப்பொருள் இலக்கியங்களைப் படிக்கும் போதோ, இதற்கு முற்றிலும் வேறுபட்ட சித்திரம் ஒன்று நம் சிந்தையில் விரிகிறது; குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்னும் நான்கு வேறு நிலப்பரப்புக்களின் மக்களும் அந்தந்த நிலப்பகுதிகளுக் குள்ளேயே கொள்வுவினை கொடுப்பு வினைகளை நடத்தி, இந்த நிலங்களின் வழிப்பட்ட நான்கு வேறு கூட்டத்தினராக வாழ்ந் திருப்பார்கள் என்ற எண்ணமே அகப்பொருள் பாடல்களில் ஊறி உயர்கிறது.

வேறொரு சித்திரம்

அக்காலத்தில் (குறிஞ்சி, முல்லை முதலிய) ஒவ்வொரு நிலப் பகுதியின் மக்களும் ஒவ்வொருவிதமான பொதுப்பெயரால் குறிக்கப்பட்டார்கள். குறிஞ்சி நிலத்து ஆண்மகனை வெற்பன் அல்லது நாடன் என்றும் பெண் மகளைக் கொடிச்சி என்றும் குறிப்பிடுவது அக்கால வழக்கம். அதுபோலவே வேறு வேறு நிலப்பகுதிகளின் மக்கள் வெவ்வேறு பெயர்களால் குறிக்கப்படு கிறார்கள். அந்தந்தக் குறிப்பிட்ட நிலத்து ஆண், பெண் களிடையே ஏற்பட்ட காதலையே அகப்பொருள் இலக்கியம் பாடு கிறது.

இவ்வாறு பாடுவது ஓர் இலக்கிய மரபு என்றும் இதற்கும் அக்காலத்திய வாழ்வுக்கும் தொடர்பு இல்லை என்றும் முடிவு செய்ய இயலவில்லை. இதனின்றும் மாறுபட்ட ஒன்றிரண்டு செய்திகள் இலக்கியத்திலேயே. வெளிப்படையாகவும் குறிப்பாகவும் இடம் பெறுகின்றன. அவைகளைக்கொண்டு கவனிக்கையில், அக்காலச் சமுதாயத்தைப் பற்றி நமக்கு வேறொரு விதமான சித்திரம் கிடைக்கிறது.

ஒரு திணைக்குரிய (ஒரு நிலத்துக்குரிய) மக்களுக்குள்ளேயே காதல் தோன்றுவதும் திருமணம் நடைபெறுவதுமாகிய செய்தி களையே படித்து வருகிற நமக்கு, நற்றிணை 45ஆம் பாடல் வேறொரு விதமான காட்சியைத் தருகிறது: தோழியின் மூலமாகத் தலைவியைப் பெற விரும்பிய தலைவனிடம், தோழி,

("உங்கள் இருவருக்கும் காதல் உறவு ஏற்பட முடியுமா?" என்று) கேட்பதாக அமைந்துள்ளது இப்பாடல் :

"இவளே,
கானல் நண்ணிய காமர் சிறுகுடி
நீல்நிறப் பெருங்கடல் கலங்க உள்புக்கு
மீனெறி பரதவர் மகளே ;
நீயே,
நெடுங்கொடி நுடங்கும் நியம மூதூர்க்
கடுந்தேர்ச் செல்வர் காதல் மகனே . .
நிணச்சுறா அறுத்த உணக்கல் வேண்டி
இனப்புள் ஓப்பும் எமக்குநலன் எவனோ ?
புலவு நாறுதும் செல நின்றீமோ ;
பெருநீர் விளையுள் எம் சிறுநல் வாழ்க்கை
நும்மொடு புரைவதோ அன்றே !-
எம்ம னோரில் செம்மலும் உடைத்தே!"

அவள் நெய்தல் நிலத்துக்கு உரியவள் ; அவன் மருத நிலத்தைச்சேர்ந்தவன் . . "எம் சிறுநல் வாழ்க்கை நும்மொடு புரைவதோ அன்றே" என்று அவள் (தோழி) கூறுவதிலிருந்தே இரண்டு நிலப்பகுதிகளிலும் வாழ்க்கை முறைகள் வெவ் வேறு விதமானவை என்பது தெரிகிறது. இக்காலத்தில் ஒவ்வொரு சாதியாரும் மதத்தாரும் வெவ்வேறு விதமான வாழ்க்கை நடை முறைகளைக் கைக்கொள்வது போலவே, அக் காலத்தில் (குறிஞ்சி, முல்லை முதலிய) ஒவ்வொரு நிலத்து மக்களும் ஒவ்வொரு விதமாக வாழ்ந்திருக்கிறார்கள். எனவே, நெய்தல் நிலத்தில் பிறந்து வளர்ந்த இவள் மருத நிலத்து ஒருவனுக்கு வாழ்க்கைப்பட்டால் அந்த நில வாழ்வுக்குத் தன்னைச் சரிப்படுத்திக்கொள்வது இயலுமா என்பதே இதன் பொருள்.

இவ்விதமானதோர் அய்யம் எழ வேண்டுமானால், வெவ்வேறு நிலப்பகுதிகளும் தனித்தனி விதமான வாழ்க்கை உடையனவாக இருந்திருக்க வேண்டும் என்பது தெளிவு. பெண்களும் ஆண் களும், பெரும்பாலும். தத்தம் நில எல்லைக்கு அப்பால் மிகுதி யாகச் செல்லாததாலோ, சென்றாலும். 'ஒருநிலத்தார் பிறநிலத் தாரோடு திருமண உறவு கொள்ளக் கூடாது'. என்ற மரபு ஒன்று இருந்ததாலோ. இருவேறு நிலப்பகுதிகளைச் சேர்ந்த ஆண், பெண்களிடையே காதலோ திருமணமோ மிகுதியாக ஏற்பட

வாய்ப்பிருந்ததில்லை என்றும் தெரிகிறது. இந்தப் பொது நடைமுறைக்கு விலக்காக, எப்போதாவது இரண்டு நிலங்களைச் சேர்ந்தவர்களிடையே காதல் ஏற்பட்டபோது; அந்தக் காதல் நீடித்து நிற்குமா என்னும் அய்யம் எழுந்திருக்கலாம் என்பது இயல்பே. அத்தகையதோர் அய்யத்தால்தான் இதில் வரும் தோழி தலைவனைச் சேட்படுத்துகிருள்; அதாவது. "உங்கள் தொடர்பு வளர்வது பல சிக்கல்களுக்கு இடமாகக் கூடுமாகையால் இதைத் தவிர்ப்பது நல்லது" என்று தொடக்கத்திலேயே அவனுக்கு அறிவுரை கூறுகிருள்.

மற்ருெருகாட்சி

குறுந்தொகை 32 ஆம் பாடலில் வரும் ஒரு செய்தி, மேற்குறிப்பிட்டது போன்ற இருநிலக் காதலர்களின் வாழ்வில் ஏற்பட்ட சிக்கலைச் சித்திரிப்பது போலத் தோன்றுகிறது:

" அமர்க்கண் ஆமான் அஞ்செவிக் குழவி
கானவர் எடுப்ப வெரீஇ, இனம்தீர்ந்து
கானம் நண்ணிய சிறுகுடிப் பட் டெனை
இளையர் ஓம்ப மரீஇ, அவண் நயந்து,
மனையுறை வாழ்க்கை வல்லியாங்கு
மருவின் இனியவும் உளவோ ?
செல்வாம் தோழி, ஒல்வாங்கு நடந்தே : . '

'தலைமகன் வரவுணர்ந்து (வரைவுணர்ந்து) தலைமகள் இயற்பட மொழிந்தது'என்னும் குறிப்புடன் இப்பாடல் காணப்படுகிறது. தலைமகன் வரைவு (செய்து கொள்ள ஏற்பாடு செய்ததை) உணர்ந்து தலைவி இவ்வாறு பேசினுள் என்ருல், இப்பாடலின் உணர்ச்சிக்கு மதிப்பே இல்லாமல் போகிறது. திருமண ஏற்பாடு நடந்து விட்டதை அறிந்தபின் இவர்கள் அவனைத்தேடிக்கொண்டு ஏன் போகவேண்டும்? எனவே தலைவன் சிறைப்புறமாக இருக்க, தலைவி தன் தோழியுடன் இவ்வாறு கூறினுள் என்று சொல்வதே பொருத்தமாகத் தோன்றுகிறது இப்பாட்டுக்குப்பின்னணியான சூழ்நிலை, இதில் வரும் உவமையாலேயே சித்திரிக்கப்படுகிறது.

காதலித்த தலைவன் ஏதோ காரணத்தால் திருமண ஏற்பாடு செய்வதில் தயக்கம் காட்டி வருகிருன்; அந்தக்காரணத்தைத் தோழியிடமுப தலைவியிடமும் சொல்லத்தயங்குகிருன், ஆனல்

அவர்கள் (அவன் சொல்லாமலே) அதை நன்கு புரிந்து கொண்டிருக்கிறார்கள். அதனாலேயே, அவன் கேட்கும்படியாக, அதை எண்ணி அவன் தயங்க வேண்டியதில்லை என்பதைத் தலைவி குறிப்பாக உணர்த்துகிறாள்.

இப்பாடலில் வரும் உவமைக்கு, "ஆமானின் குழவி தன் இயல்புக்கு ஒவ்வாத குடியிற் பட்டாலும் அவர்களோடு மருவி அவரது வாழ்க்கையிலே வன்மை பெற்றது போல் தலைவர் தம் இயல்புக்கு ஒவ்வாரெனினும் அவரோடு பழகி அவருடைய இயல்புகளைப்பெற்று வாழ வேண்டும் என்று உவமையை விரித்துக் கொள்க" என்று விளக்கம் தருகிறார் டாக்டர் சாமிநாத அய்யர். ஆனால், ஆமான் குழவியைப்பற்றிய உவமை, அது, தனக்கு முற்றிலும் வேறுபட்ட வாழ்க்கை முறையைப் பழகிக்கொண்டு வேறுபட்ட சூழ்நிலையில் வாழ்கிறது என்னும் பொருளைத் தருகிறது. தரவே, "எனக்குப் புதியதான வேற்றுநில வாழ்வுக்கு (அந்த ஆமான் குழவி போல) நான் பழகிக்கொள்வேன்" என்று தலைவனுக்குத் தலைவி குறிப்பிக்க விரும்புகிறாள் என்பதே உவமையின் விளக்கமாகக் கிடைக்கிறது. தவிரவும். தன்னோடு இத்தனை காலம் பழகியுள்ள தலைவனின் இயல்புகளை இனிமேல்தான் தெரிந்துகொள்ளப்போவதாகவும் அவற்றுக்கு ஏற்பத் தன்னை மாற்றிக்கொள்ளப்போவதாகவும் தலைவி சொல்லுவதும் பொருத்தமாக இல்லை. அல்லாமலும், களவு ஒழுக்கத்தின் போதுதான் தலைவனுக்காகவே வாழுகிறாள் தலைவி; கற்பு ஒழுக்கத்தில் அவனுக்காகவும் அவனோடு சேர்ந்தவர்களை உள்ளிட்ட சமுதாயத்துக்காகவும் அவள் வாழவேண்டியவளாகிறாள். களவுத்தொடர்பு ஏற்பட்டுத் திருமண முயற்சிகளில் தயக்கம் ஏற்படுகிறது என்றால் அது, அவனுடைய சமூகம் என்னும் புறச் சூழ்நிலையைப் பற்றியதாகவே இருக்க வேண்டும். 'புதிதாகக் கணவன் வீட்டுக்கு வந்து சேரப்போகிறவள் அவனுடைய குடும்பத்தாரின் இயல்போடும் பழக்க வழக்கங்களோடும் எளிதாக ஒத்துப்போக முடியுமா?' என்பதே அவனுடைய தயக்கத்துக்குக் காரணம் என்பது. தலைவியே அத்தயக்கத்தைப் போக்க முன்வந்ததிலிருந்தே தெளிவாகிறது. எனவே. இந்தப்பாடல் வெவ்வேறு வாழ்க்கை முறைகளையுடைய வெவ்வேறு நிலப்பகுதிகளைச் சேர்ந்த தலைவன் தலைவியரைப்பற்றியது என்றே கொள்ள வேண்டும்.

முடிப்புரை.

இந்த இரண்டு பாடல்களின் செய்திகளைக் கொண்டு கவனிக்கையில், சங்கப் பாடல்களால் குறிக்கப்படும் தமிழ்ச் சமுதாயத்தில் நான்குத் (நிலத்) திணைகளிலும் வாழ்ந்த

மக்களிடையே திருமண உறவு மிகுதியாக இருந்ததில்லை என்று ஊகிக்க முடிகிறது. வேறுபட்ட நிலப்பகுதிகளில் வாழ்ந்த மக்களிடையே காதல் (திருமண) உறவு அடியோடு தடை செய்யப் பட்டிருந்ததாகச் சொல்லமுடியாது; இந்த இரண்டு பாடல்களும் குறிக்கின்ற நிகழ்ச்சிகளால் திருமணம் தடைப்பட்டதென்றும் சொல்லமுடியாது. அப்படி இருந்திருந்தால் இப்பாடல்களை அன்பின் அய்ந்திணையுள் சேர்த்திருக்க மாட்டார்கள் அல்லவா? ஆனாலும் வெவ்வேறு நிலப்பகுதிகளின் வாழ்க்கை முறைகளும் பழக்க வழக்கங்களும் கணிசமான அளவில் வேறுபட்டிருந்தன என்றும் அவ்வேறுபாடு நிலம்விட்டு நிலம் நடைபெறும் "கலப்புத்திருமணங்"களை ஊக்குவதாக இல்லை என்றும் கருத இடம் இருக்கத்தான் இருக்கிறது. இந்தச் சூழ்நிலையை உருவாக்கிய அக்காலத் தமிழ்ச் சமுதாய வாழ்வு ஆழ்ந்த ஆராய்ச்சிக்கு உரியது. அந்த ஆராய்ச்சி இனிமேலாவது தீவிரமாக நடைபெற வேண்டும்.

தமிழகப் புலவர் குழுவின் 28-ஆவது கூட்டம்

திருச்சி
ஏப்ரல் 13

தமிழகப் புலவர் குழுவின் 28-ஆவது கூட்டம், கோயமுத்தூர் அவிநாசி சாலையிலுள்ள "தலைவர் மன்ற" த்தில் மே மாதம் 9-ஆம் நாள் சனிக்கிழமைக் காலையில் செயற்குழுவும், மாலையில் பொதுக்கூட்டமும் 10-ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமைக் காலையில் புலவர் பெருமக்களின் கருத்தரங்கும், மாலையில் சான்றோர் குழுவுமாக, இரண்டு நாட்களும் மிகச் சிறப்பாக நடைபெறும்.

கோவை, விஞ்ஞானப்பேரறிஞர் உயர்திரு. ஜி. டி. நாயுடு அவர்கள் வரவேற்பு ஏற்பாடுகளை விரைந்து செய்துவருகிறார்கள் என அதன் அமைப்பாளர் திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் அறிவிக்கிறார்.

சிலை எடுத்த செம்மல்

26—2—70 இல் நடைபெற்ற இளங்கோவடிகள் தமிழ்க் கழக வெள்ளி விழாவில் சென்னை மாநிலக் கல்லூரி இணைப் பேராசிரியர் திரு. K. S. மகாதேவன் எம். ஏ., பி. எசி. அவர்கள் ஆற்றிய சொற்பொழிவின் சுருக்கம் :-

ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகளுக்கு முன்பு பத்தினித் தெய்வமாகிய கண்ணகிக்குச் சேரன் செங்குட்டுவன் சிலை எடுத்தான். பத்தினித் தெய்வத்தைப் பரசல் வேண்டும் என்னும் ஒருபெருங் குறிக்கோளுடன் வடநாடு நோக்கிப் படையெடுத்துச் சென்று, காவா நாவின் கனக விசயரைப் போரில் வென்று வாகை சூடி, இமயத்துக் கல்லெடுத்துக் கண்ணகிக்குச் சிலை எடுத்த செம்மலாகிய சேரன் செங்குட்டுவனுக்கு, சிலப்பதிகாரத்திற்குத் திறனாய்வு நூல் எழுதுவோரால் பலபல மாசுகள் ஏற்றிக் கூறப்படுகின்றன. அந்த மாசுகள் செங்குட்டுவனிடம் சிறிதும் இல்லை. இடுதேள் இடுமாறு போலத், திறனாய்வாளர்கள் கூறும் மாசுகள் பொய்மை மிகுந்தவை என்பதைவிளக்குவதே என் நோக்கமாகும்.

சாத்தனார், பேராற்றங் கரையில் தங்கியிருந்த சேரன் செங்குட்டுவனிடம் கண்ணகி கோப்பெருந்தேவி ஆகிய இரு பெருங் கற்புடை மகளிர் வரலாற்றைக் கூறினார். அதுகேட்ட செங்குட்டுவன் தன் கோப்பெருந் தேவியைப் பார்த்து, "நன்னுதலே! இக்கற்புடை மகளிர் இருவருள்ளும் நம்மால் வியக்கத்தக்க நலம் படைத்தோர் யார்?" என்று வினவ, கோப்பெருந் தேவி

> "காதலன் துன்பம் காணாது கழிந்த
> மாதரோ பெருந்திரு வுறுக வானகத்து
> அத்திறம் நிற்கநம் அகல்நாடு அடைந்த இப்
> பத்தினிக் கடவுளைப் பரசல் வேண்டும்" என
> விடை கூறினாள்.

கோப்பெருந் தேவி தன்மனம் மகிழுமாறு விடை கூறியதும் செங்குட்டுவன் நூலறி புலவரை நோக்க, ஆங்கு அவர்

> "ஒற்கா மரபிற் பொதியில் அன்றியும்
> விற்றலைக் கொண்ட வியன்பேரிமயத்துக்

கற்கால் கொள்ளினுங் கடவுளாகும்
கங்கைப்பேர் யாற்றினும் காவிரிப் புனலினும்
தங்கிய நீர்ப்படைத் தகவோ உடைத்து'' என்று
பணிந்து மொழிந்தனர். உடனே, செங்குட்டுவன்
''பொதியிற் குன்றத்துக் கற்கால் கொண்டு
முதுநீர்க் காவிரி முன்றுறைப் படுத்தல்
மறத்தகை நெடுவாள் எங்குடிப் பிறந்தோர்க்குச்
சிறப்பொடு வரூஉம் செய்கையோ அன்று''

என்று கூறி வடநாடு நோக்கித் தான் படையெடுக்கப் போகும் செய்தியைக் கூறினான். சில திறனாய்வாளர்கள் செங்குட்டுவன் கண்ணகிக்குச் சிலை செய்ய ஏற்ற கல்லைப் பொதிய மலையில் எடுத்துக் காவிரியில் நீராட்டவே நூலறி புலவர்கள் விரும்பினர் என்றும், அதனால்தான் இமயமலையில் கல்லெடுக்கலாம் என்று கூறுவதற்கு முன்னர் பொதிய மலையில் கல்லெடுக்கலாம் என்று கூறியதாகவும், செங்குட்டுவன் அவர் கூற்றை மீறி வடநாட்டுப் படையெடுப்பை மேற்கொண்டான் என்று கூறிச் செங்குட்டுவனுக்கு மாசு ஏற்படுத்த முயல்கின்றனர். நாட்டை எதிர்நோக்கும் எந்தச் சிக்கலுக்கும் நூலறி புலவர்கள் ஆலோசனை மட்டுமே கூறத்தக்கவர்கள். முடிவு எடுக்கும் பொறுப்பு வேந்தனுடையது. எனவே, நூலறி புலவர்கள் வேந்தனுக்குப் பொதியமலையில் கல்லெடுக்குமாறு முடிவு எடுத்துக் கூறியிருப்பின் அவர்கள் நூலறி புலவர் ஆகார். நூலறி புலவர்கள் பிற்காலத்துச் சில ஆராய்ச்சியாளர் இவ்வாறு செங்குட்டுவனுக்கு மாசு ஏற்படுத்தினால் என்னசெய்வது என்றஞ்சி, இவர்களுக்கும் விடை கூறுபவர்களைப் போன்று, பொதிய மலையிலும் கல்லெடுக்கலாம் இமயமலையிலும் கல்லெடுக்கலாம் என்று பொதியமலையை முதலிற் கூறி பின்னர்க், கங்கையிலும் நீராட்டலாம், காவிரியிலும் நீராட்டலாம் என்று, கங்கையை முதலிற் கூறினார்கள் ஆகவே. அகலாது அணுகாது தீக்காய்வார் போன்று வேந்தனிடம் பழகும நூலறி புலவர்கள் கூற்றிலிருந்து செங்குட்டுவன் பொதிய மலையில் கல்லெடுப்பதனையே அவர்கள் விரும்பிக் கூறினர். அவர் கூற்றினைச் செங்குட்டுவன் புறக்கணித்தான் என்னும் குற்றச்சாற்று ஏற்றுக்கொள்ளத் தக்கதன்று.

பொதியமலைகொண்ட தமிழகத்திற்குத் தனியொருபண்பாடு உண்டு. இமயமலை நிற்கும்வடநாட்டுக்கு வேறுபண்பாடு உண்டு. இரண்டு பண்பாடுகளும் காலப்போக்கில் கலந்தன. பண்

பாட்டுக் கலப்பால் நன்மையும் கிட்டும். தீமையும் கிட்டும் தமிழகத்தைப் பொருத்தவரையில் வடநாட்டுப் பண்பாட்டுக் கலப்பால் தீமையே விளைந்தது. பொதியமலை போலவும் இமய மலை போலவும் பூம்புகாரும் அழிவின்றி வாழவேண்டும் என்று இளங்கோ போன்ற சான்றோர் விரும்பிக்கூறியதற்கு மாறாகப் பூம்புகார் நகரம் இன்று அழிந்துபோனதற்குக் காரணம் வட நாட்டுப் பண்பாட்டுக் கலப்பால், பூம்புகாரில் தமிழகப் பண்பாடு அழிந்து போயினமையே. வடநாட்டுப் பண்பாட்டுக் குச் சான்றாகத் திகழ்பவள் மாதவி. தமிழ்ப் பண்பாட்டுக்கு எடுத்துக்காட்டாக விளங்குபவள் கண்ணகி. சங்கக் கால வள்ளல்களுள் ஒருவனாக விளங்கிய பேகன் தன் மனைவி கண்ணகி மனம் வருந்துமாறு முல்லை வேலி நல்லூர்ப் பரத்தை யோடு உறவுகொண்டு வாழ்ந்தபோது கபிலர் பரணர் முதலிய புலவர்கள் பேகனை இடித்துரைத்துத் திருத்தியது போலக் கோவலனது புறத்தொழுக்கத்தைச் சான்றோர் யாருங்கண்டிக்க வில்லை. மாடலன் முதலியோர் "இம்மைச் செய்தது யானறி நல்வினை" என்றுகூறிக் கோவலன் புறத்தொழுக்கத்திற்கு நற்சான்றிதழ் வழங்கினர். சான்றோர் தம்கடமையை மறந்ததால் முதலில் பூம்புகாரின், பண்பாடு அழிந்தது இறுதியில் பூம்புகாரே அழிந்தது. பூம்புகாரையே அழிக்கவல்ல வடநாட்டுப் பண்பாடு தமிழகப் பண்பாட்டைவெல்லாதபடி தடுக்கவும்செங்குட்டுவன் விரும்பினான்.

பொதிய மலையிலே கல்லெடுப்பதும் மிகஎளிய செயலன்று. அதற்குப் பாண்டியனை வென்றாகவேண்டும். தமிழகத்தின் பண் பாட்டுக்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்கிய பத்தினித் தெய்வத்துக்குச் சிலையெடுக்கும்போது தமிழ்நாட்டு வேந்தர் களுக்குள் சண்டை மூண்டு தமிழர்கள் பலர் சாவத்தைச் செங்குட்டுவன் விரும்பவில்லை. அதேநேரத்தில் வடநாட்டுப் பண்பாடு என்னும் காட்டாறு தமிழகப் பண்பாடாகிய அழகு நகரங்களை அழித்துக்கொண்டு வருவதையும் தடுத்து நிறுத்த விரும்பினான். எனவேதான், செங்குட்டுவன் வடநாட்டுப் படையெடுப்பை மேற்கொண்டான்.

இமயமலையில் கல்லெடுத்துக் கங்கையாற்றில் நீர்ப்படுத் துதலே எம்போன்ற வேந்தர்க்குப் பெருமைதரும் என்று கூறி, வடநாட்டு வேந்தன் மடவதின் மாண்ட மாபத்தினிக்குக் கடவுள் எழுதவோர் கல் தாரான் எனில் படையெடுத்துச் செல்வேன் என்று செங்குட்டுவன் முழங்கியபோது, வில்லவன் கோதை எழுந்து

"இமிழ்கடல் வேலியைத் தமிழ்நாடாக்கிய
இதுநீ கருதினை யாயின் ஏற்பவர்
முதுநீர் உலகில் முழுவதும் இல்லை" என்று கூறினன்

இந்த அடிகளுக்கு "நீ கருதியதை உலகில் ஒருவரும் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள்" என்று பொருள்கூறும் ஆராய்ச்சியாளர்கள் உண்டு. இது பொய்யுரை. நீ இமயத்தில் கல்லெடுத்துவர எண்ணினால் உன்னை எதிர்ப்பார் இவ்வுலகில் யாரும் இல்லை, என்பதுதான் வில்லவன் கோதை மொழிந்த தற்கு நல்ல பொருளாகும். ஆகவே, வில்லவன் கோதை கூறிய கருத்தை மீறிச் செங்குட்டுவன் வடநாட்டுப் படையெடுப்பை மேற்கொண்டான் என்னும் கூற்றுத் தவறுடையதாகும்

சில ஆராய்ச்சியாளர்கள், செங்குட்டுவன், கண்ணகிக்குச் சிலையெடுக்கக் கல்லொன்று 'தரவேண்டும்' என்று வடநாட்டு வேந்தரிடம் அன்போடு வேண்டிக் கொண்டிருந்தால் அவர் களும் மனமகிழ்ந்து தந்திருப்பார்கள்; ஆகவே, செங்குட்டுவ னது படையெடுப்புத் தேவையற்றது என்று கூறுகின்றனர் இதுவும் தவறு' நம்மைப்போன்ற எளிய மக்கள் ஒரு நற் செயல் செய்ய வேண்டுமானால் "நிதி மிகுந்தவர் பொற்குவை தாரீர், அதுவும் அற்றவர் வாய்ச்சொல் அருளீர்" என்று கேட்டு நிதி திரட்டலாம், இந்த வழி வேந்தர்க்கு இழிவினைத் தரும். தஞ்சைப்பெருங் கோவிலும், கங்கைகொண்ட சோழ புரக் கோவிலும் இதற்குச் சான்று பகரும், ஆகவே, படை யெடுத்துச் சென்று போர்புரிந்து பகைவரை வென்று கண்ண கிக்குக் கோவில் கட்டியதுதான் செங்குட்டுவனுக்குச் சிறப்புத் தரும் செயலாகும்.

சில ஆய்வாளர்கள் "வடவாரிய மன்னர் ஆங்கோர் மட வரலை மாலைசூட்டி உடனுறைந்த இருக்கை தன்னில் ஒன்று மொழி நகையினராய்த் தென்றமிழ் நாடாளும் வேந்தர் செரு வேட்டுப் புகன்றெழுந்து மின்றவழும் இமயநெற்றியில் விளங்கு விற் புலி கயல் பொறித்த நாள் எம்போலும் முடி மன்னர் ஈங்கில்லை போலும் என்ற வார்த்தை அங்கு வாழும் மாதவர் வந்தறிவுறுத்தவிடத் தாங்கண் உருள்கின்ற மணிவட்டைக் குணில்கொண்டு துரந்தது போல் இமயமால்வரைக் கற் கடவுளாம் என்ற வார்த்தை இடந்துரப்ப, ஆரிய நாட்டு அரசோட்டி அவர் முடித்தலை அணங்காகிய பேரிமயக்கல் சுமத்திப் பெயர்ந்து போந்து" என்னும் வாழ்த்துக் காதையில் வரும் உரைப்பாட்டுப் மடைப்பகுதியை வைத்துக்கொண்டு கனகவிசயர் தமிழரை இகழ்ந்த செய்தி செங்குட்டுவன் காதில்

விழுந்ததும் வடநாட்டுப் படையெடுப்பை மேற்கொள்ள வேண்டும் என்று கருதியதுதான் முன்னர் என்றும், சாத்தனுர் வாயால் கண்ணகியின் வரலாறு கேட்டுக் கோவில் கட்ட முடிவு செய்தது அதன்பின்னர்என்றுங் கூறிடுவர். இவ்வாறு கூறினுல் கண்ணகிக்குச் சிலையெடுத்தலே செங்குட்டுவன் வடநாட்டுப் படையெடுப்பின் தலையாய நோக்கம் என்னுங் கூற்றுத் தவறுடையதாகின்றது. கண்ணகிக்குச் சிலை எடுத்தலே செங்குட்டுவனது தலையான குறிக்கோள். படையெடுப்புக்கு ஆயத்தம் செய்துகொண்டிருக்கும்போது கனகவிசயர் நகைமொழி செங்குட்டுவன் செவியில் விழுந்தது. முன்பே வேகமாக உருண்டுகொண்டிருக்கும் மணிவட்டைப் பின்னுங் குணில்கொண்டு துரந்தது போல் இமயமால்வரைக் கற்கடவுளாம் என்ற வார்த்தையை கனகவிசயர் வார்த்தை இடந்துரந்தது எனவே செங்குட்டுவன் முன்னிலும் பெருஞ் சீற்றங்கொண்டு வடநாட்டுப் படையெடுப்பை மேற் கொண்டான்.

இப்போது சென்னைக் கடற்கரையிலுள்ள கண்ணகிச் சிலை பாண்டியனைச் சிலம்பின் வென்றசேயிழையின் கோலமாகும் இதனைச் சிலர் மதுரையை எரித்த கோலமென்று சொல்லி மாசு கற்பிக்கின்றனர். இஃதே போன்று வஞ்சிமாநகரில் அன்று கண்ணகிக்குச் சிலை எடுத்த செம்மல் செங்குட்டுவனுக் கும் மாசு கற்பித்தனர். இவ்வாறு மாசு கற்பிப்பதற்கென்றே சிலர் என்றும் உள்ளனர்போலும்.

பொழிலன்பர்கள் சுவைக்க:-

" பழமையால் மாத்திரமன்றி, இயல்வரம்பாகிய திருந்திய நிலையாலும், இனிமை முதலியவற்றாலும் தமிழ்மொழி தலைசிறந்து விளங்குதலின், நம்பெருமக்கள் பலரும் தமிழைக் குறிக்குமிடத் தெல்லாம் செந்தமிழ், பைந்தமிழ், இன்றமிழ், மென்றமிழ் வண்டமிழ், ஒண்டமிழ், நற்றமிழ், சொற்றமிழ் என்றிங்ஙனம் அடையடுத்து வழங்குவாராயினர் — ந. மு. வேங்கடசாமி நாட்டார்

(பொ. து. 1. பக்-12)

முருகனும் பிள்ளைத்தமிழும்.

திரு. வித்துவான். பி. மா. சோமசுந்தரனர்.

1. முன்னுரை.

நற்றமிழ் பயந்த நந்தாச் செல்வங்களென நாவலர்போற்றும் நயங்கவினும் சிற்றிலக்கியங்கள் தம்முள் நனிபெருஞ் சீர்த்தி யுடையது பிள்ளைத்தமிழேயாம். மதலையைத் தொட்டிலிலிட்டு மகளிர் ஆட்டுதல் அச்சேயின் செங்கனிவாய் முத்தங்கேட்டுச் செம்மாத்தல், வாராதிருந்தால் இனிநான் உன்வடிவேல் விழிக்கு மையெழுதேன் எனப் பிணங்குவார்போற் கொஞ்சி வசஞ்செய்தல் முதலாய பற்பல நிகழ்ச்சிகளில் பத்து நிகழ்ச்சிகளை இலக்கண நூலார் விதித்தாங்குப் பாடலே பிள்ளைத்தமிழ் ஆம்.

பரிசில் வாழ்க்கை நடாத்திய பாவாணர், பொருள்வழங்கும் புரவலன் மார்க்கு இறும்பூதெய்தும்படி அவர்தம் பிள்ளைக் கால நிகழ்ச்சிகளைக் கற்பனைக்கண்ணுற் கண்டு பாடுவர். ஆகலின், பிள்ளைத்தமிழ் புனைந்துரை நூலென்பதூஉம், பாடற்றலைவன் தொண்ணூருட்டைக் கிழவனே யாயினுமாகலாமேயலாது சேய்ப் பருவத்தராகா ரென்பதூஉம் பெறப்படும் பின்னர் இந்நூல் ஆசிரியன்மார், மடத்தலைவன்மார், வழிபடுகடவுளர் என்னும் இன்னோர்க்கும் உரித்தாயது.

பிறப்பு, மழலை, நடை முதலிய சார்ந்த உடல், அறிவித்தாலன்றி அறியாவுளம், பிறப்போடியைந்த இறப்பு முதலாங் குற்றங்கட்சார்ந்தாரே இப்பிள்ளைத்தமிழுக்குரியரென்க, ஒருகால் நீட்டி ஒருகால் மடித்திருகையும் புவியிலூன்றி, வாயிற்குதலை நீர் பெருகச் சிரமசைத்து ஆடுக செங்கீரை எனச் செங்கீரை யாடுந் திறத்தைக் குழவிக்கறிவுறுத்தலான் அறிவிக்க வன்றி அறியாவுளம் எனும் திறம்பெறப்படுமால். எனவே இவையில்லாச் சிவனுர்க்குப் பிள்ளைத்தமிழ் இசைத்திலர்.

"எல்லார் பிறப்பு மிறப்புமியற் பாவலர்தஞ்
சொல்லா லறிந்தேநஞ் சோணேச — ரில்லிற்
பிறந்தகதை யுங்கேளேம் பேருலகில் வாழ்ந்துண்
டிறந்தகதை யுங்கேட்டி லேம்"

எனக் குருநமசிவாயத் தேவர் திருவாய்மலர்ந்தருளின்மையும் உன்னுக. ஆயின், சிவனரின் வேறாகாத உமை, முருகன், கணபதி யிவர்கட்கு அப்பிள்ளைத்தமிழ்இசைத்தலியையுங்கொலோவெனின், இயையும், இயையாதென அப்புலவன்மார் துணிந்தாரலர். துணியப்புக்கிருப்பின் "பெம்மான் முருகன் பிறவா னிறவான்" எனவருதல் போன்ற அனுபூதி மொழிகளை நோக்கியிருப்பர். பிற்றை நாட்புலவன்மார், ஆய்வு, துணிபு என்பன நோக்காது பாடியுளர். இஃதுதவறுடைத்தே, தவறு மாறுங்காட்டுவம்.

2. பிள்ளை - சொற்பொருள்

பிள்ளைமை என்பது மடமைப்பண்பினையே உணர்த்துவது அதனுனன்றே மடமை என்பதும் இளமை என்பதைக் குறிப்ப தாயது. அன்றியும்,

> "படையி ழந்தன னிவனென வுன்னியே பால
> னிடைதெ ரிந்தனன் போலவே யிமையவர் யாப்பை
> விடுதி யென்னவும் வல்லனு யினன்விளி வில்லே
> னடலு மாற்றலு மறிந்திலன் பிள்ளைமை யதனுல்" எனவும்
> "ஒருத்தி நா ளொருத்திக் கிந்த வொருமக னிவனுந் தேறுங்
> கருத்திலாச் சிறியன்" எனவும்

வரும் கந்த புராணத் திருச்செய்யுளும் (இரண்டாம் நாள் சூரபதுமன் போர்) திருவிளையாடற்புராணச் செய்யுளும் (மாமனுகி வந்து வழக்குரைத்தது) இதனை விளக்குமாறு காண்க.

முற்றுணர் முதல்வனு முருகற்குச் சிற்றுணர்வினராம் மக்கள் இவ்வாறு 'ஆடுகசெங்கீரை' 'தாலோ தாலேலோ' என உணர்த்த முற்படுவது தீயூழின் திறத்ததோ, நல்லூழின் பாலதோ என அறிஞர் சிந்திப்பாராக. அற்றன்று, கழிபேரன்பு காரணமாய் நிகழ்தலின் கந்தவேள் குற்றங் கருதான் எனற்குப் பகழிக்கூத்தர் சான்று பகர்வரே யெனின், இவ்விடையேலாது. என்னை? பிள்ளைத்தமிழ் பாடி பிறவிப்பிணியினீங்கினர் இவ ரெனக் காட்ட வொருவரும் இன்றே, அன்றியும் இச்சமாதானம் அரனுக்கும் ஏலுமேயென்க. அரன் குழவித் திருவுருவங் கொண் டானிலேயே யெனின், ஆலவாய்ப் புராணத்து' விருத்த குமார பாலரான படலம்' அவன் குழவித்திருவுருக் கொண்டதைக் கூறுமே யென்க ஆகலின் இஃது நறிய சமாதானமாகாது. முருகனும், சிவனை நிகர்ப்பவே சாமவேதத்துட் சிறப்பிக்கப் படுதலே,

"எக்கலேக்கும் பூதங்க ளெவற்றினுக்கும்
பிரமனுக்கு மீசனென்னத்
தக்கமுதற் பரப்பிரமஞ் சதாசிவனே மெனவேதஞ் சாற்று மல்லால்
முக்கனல்சூழ் வேள்வியினிற் சுப்ரமண்ய மோமெனவே முக்காற் கூறும்
இக்கருத்தை யறியானை யெவ்வாறு விடுவிப்ப
தியம்புமின்னே"

எனக்காஞ்சிப் புராணங் கழறுமாறுங் காண்க.

ஆகலின், எண்குணனாய், யாண்டும் எவ்வகைத் தோற்றத்துக்கும் மூலனாயுள்ள முருகன்மேல் பிள்ளைமைத் தன்மையாம் பேதைமையேற்றிப்பாடுதல் பேதைமையாம்; பிறவிப்பெருங்கடலூட்படுத்தும் பிழையுமாமென்க.

3. குழவித்திருமேனி

குமரன் கொண்ட கோலம் குழவித் திருமேனியே யன்றே? அது கருதிப் பாடலமையாதோ வெனின், கூறுதும். முருகன் குழவித் திருவுருவினனே யலாது குழவியாகானாகலின், அக் குழவிப் பண்பியைத்துப் பாடுதல் குற்றப்படுவதே யாமென்க என்னை?

"ஆதலி னமது சத்தி யறுமுக னவனும் யாமும்
பேதக மன்று நம்போற் பிரிவிலன் யாண்டு நின்றான்
ஏதமில் குழவி போல்வான் யாவையு முணர்ந்தான் சீரும்
போதமு மழிவில் வீடும் போற்றினர்க் கருள வல்லான்"

என வரும் கந்தபுராணத் திருப்பாடலும் இவ்வுண்மையை வலியுறுத்துமே என்க" ஏதமில் குழவி போல்வான்" என்பதை ஊன்றி நோக்குக.

அறுமுகன் மாட்டுக் குழவிப் பண்பிலாமையை ஈண்டுணர்த்துதும், தாய் தந்தையர் கற்பிப்பக்கற்றுச் சொல்லாடுவர் மதலேயர். ஆயின் இச்சேய்ப் பரமனே தாதைக்கே முதலெழுத்தின் பொருளுணர்த்திய குரவன் ஆவான்.

"அகரப்பொரு ளாதி யொன்றிடு
முதலக்கர மான தின்பொரு
ளரனுக்கினி தாமொ ழிந்திடு - குருநாதா"

எனத் திருப்புகழ் முனிவர் தெரித்தலுமோர்க. அன்றியும், அவன் முதற்கண் அறுமுகமுடைப் பரமனுய்த் தோன்றியே பின்னர் அறுமீன் பாலுறுதற்கு ஆறு சேய்களாயினன். இதனைக் கந்தபுராணத்துள்

"அருவமு முருவு மாகி யநாதியாய்ப் பலவா யொன்றாய்ப்
பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனி யாகிக்
கருணைகூர் முகங்க ளாறுங் கரங்கள் பன்னிரண்டுங்
கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங் குதித்தன னுலக முய்ய"

என வருவதனு னுணர்க. அன்றியும், அறுமீன் கொடியார் பாற்கொண்ட ஆறுசேயுருக்களோ அப்பரமன் கொண்ட திருவுருவென அறுதியிடற்கும் இடன் இன்று, என்னை? அம்மாதர் மாட்டே ஆறு சேய்களாயும் அண்டங்களெல்லாம் அளவில் சேய்களாகவுங்காட்டி யாடல்புரிந்தாருகலின்.

"ஒரு குழவி யோகநித்திரை செய்தது. ஒன்று அடிக்கடி இன்புறுமுறுவல் புரிந்தது. ஒன்று பேரொலியெழ ஓழமிட்டது. ஒன்று நகைத்துக் கொண்டுங் கலுழ்ந்து கொண்டு மிருந்தது. ஒன்று காற்பெருவிரலைச் சுவைத்துக்கொண்டழுதது. ஒன்றுகையிரண்டையுங் கூப்பி வாயில் வைத்துக்கொண்டது ஒன்று மார்பினுலே நகர்ந்தது. ஒன்று முழந்தாள் நிலம்படியத்தவழ்ந்தது. ஒன்று இரண்டு மூன்றடி நடந்து வீழ்ந்தது. ஒன்று சிறிது தூரஞ் சென்று சமபூமியினை யடைந்தது. ஒன்று தாய்க்கரம் பற்றிச் சமபூமியினைக் குறுகிற்று. ஒன்று வீழ்தலு மெழலுமாய்த்திரிந்தது. அடுத்த வொரு நொடிப்போதிற்குள் ஒன்று அடிக்கடி ஓடுவதாயிற்று. ஒன்று நடத்தலையே செய்வதாயிற்று. ஒன்று தவளைபோலத் தத்தித்தத்திச் சென்றது. ஒன்று தம்முள் மற்றெரு குழவியோடு மல்லரைப்போலவும், யாட்டைப்போலவும் நெற்றியில் முட்டிக்கொள்வதாயிற்று பின்றை அவ்விரு குழவிகளும் மற்போர் புரியலுற்றன. இவ்விதத் திருவிளையாடல்களைக் கண்ணுற்ற விண்டு முதலிய தேவர்கள் 'நாம் ஒரு மகவை யளிக்குமாறு ஈசனை இரந்து நின்றேம். எண்டெத்தனையோ சேய்கள் வந்துள்ளார்கள். என்னென்னவோ திருவிளையாடல்களும்புரிகிருர்கள். இனி, இவ்வுலகிற் கெந்நலமெய்தாது போம்' எனுக்கழி பேருவகையுற்றுர்கள்". என வடமொழிக்காந்தம் வழுத்துதலை எண்ணுக; பிள்ளைத்தமிழ்ப்பாடுவார். இத்துணைச் சேய்களுளெச் சேய்க்கென அதனைப்பாடுநராவாரெனின் மூகமே சாதிப்பர் போன்ம்! இக்குழவி கட்கெலா மூலமுய முருகனையே எம்பாடல்

நோக்கிற்றெனின், அவன்றன் குழவித் திருவுருவனுயித்துணை யாடலையும் செய்தனனுயினும், அறுமுகப் பரமனுயன்றேதோற்றினு னென்க. அன்றியும் அக்குழவிகளிடைவினென்றும் முருகன் தோற்றத்துக்கு மூலமாயுள்ளதுமாய்

"தலையெங்கு நரைத்துக் கண் காது மங்குதலுற்றுக்
கைத்தண்டொன்
றூன்றி வருமொரு கிழவன் போலாகித் தேவர்
குடியிலாது பாழ்த்துக் கிடக்
கின்ற பட்டணங்களை முன்னிருந்தாங் காக்கிக் காத்தலிற்
கவலைகொண்ட
வனெனவும் ஆங்குத் திரிதரா நின்றனன்"

எனவரும் ஆடலைப்புரிந்த சேய்க்கு எப்பருவம் ஏற்புடைத் தாம்? ஆகலின் சேயுருவினனேயலாது அப்பண்பிலாப் பரமற் குப்பிள்ளைத்தமிழ்ப் பாடல் குற்றமேயாம்.

4. காலமும் கணக்குங் கடந்த காரணன்.

அறுமுகச்சிவ னியற்றிய பஃறிற வாடல்களால், மருட்கை கொளீஇ, இந்திரனுதியர் எதிர்ந்த ஞான்று, அவரை மாளப் பண்ணி, மீளவும் உயிர்ப்பித்தகாலை, அவர்க்கு மெய்யுணர்வு கொளுத்துவான் திருவுளங்கொண்ட செவ்வேட் பரமன் "எம்மைச் சிறுவனென்றுள்ளிச் செடியாய வல்வினைக் காட்படேல், எம துண்மைத் திருவுருக் காண்டி" எனத்திருவாய் மலர்ந்தருளி மாற்றமனங்கழிய நின்ற பரமேசத் திருக்கோலங் காட்டினன். அப்பேருருவத்து,

"திருவடிக்கண் கீழுலகமேழும், கணைக்காலில், தீவுகளேழும் ஆடையில் கடல்களேழும், கொப்பூழில் வானுலகும், புயத்தில் எண்டிக்குகளும், சென்னியில் விண்ணும், மூவிழிகளிலும் முச்சுடர் களும், ஆன்மாவில் சிவனும், அறிவில் சத்தியும் இடப்பால் விண் டுவும், வலப்பால் வனசனும், வேதவாக்கில் கலைமகளும், திருநிலை யில் திருமகளும், சடராக்கினியில் தீக்கடவுளும், நூபுரம் முதலிய அணிகளில் அரவுகளும், திருமேனியின் மயிர்களில் ஓடதிகளும் அம்மயிர்க்கால்கள் தோறும் பேன்முட்டைகள் போன்று தெரியும் அண்டங்களும் ஒவ்வொரு அண்டங்களினுள்ளும் பலவுலகங் களும் இருப்பக்கண்டனர்" தேவர்கள்.

என அம்முதல்வன் புராண மொழிவதறிந்தும். சிற்றறிவினர்க்கே செல்லும் தகைத்தாய பிள்ளைத்தமிழை முருகற் குரைத்தலும் பெருமதியாமோ ?

அன்றியும் முருகன் குழவித் திருவுரு வொன்றே கொண்ட மைந்தனும் அன்று. வேண்டுங்கால் வேண்டும் வடிவம்கொள் விமலனென்பது முன்னேகாட்டினும். சூரபதுமன் ' அடலு மாற்றலு மறிந்திலன் பிள்ளைமை யதனுல்' எனக் கூறிச் செவ்வேளைப்பிள்ளை யென்றிகழ்ந்த பாடலையு முன்னரே காட்டினும். ஆயின் ஆரும் நாளன்று அச்சூரன் ஆகம் பிளந்து அமரர்க்கு நாடீந்து திருப்பரங் குன்ற மேவித் தேவயானையைத் திருமணமேவினனே. ஆயின் சேய் உருக்கொடோ மணந்தான்? அன்றே. இளையனுயன்றே மணந்தான். மேலும் சின்னுட்கழிய வள்ளியம்மையைத் தேடி மணங்கொண்டானே.

இன்றும் அச்செவ்வேள் சிவன், தேவி ஆய, யிருவரிடத்தும் சேயுருவினும்: வள்ளி, தேவயானை யிடத்துப் பதினுருட்டை யிளையனுங்கோலத்தினும்: பத்தர்மாட்டுப் பிரமமாய்நின்றசோதிப் பிழம்பாகியும் பிறங்குபவனேயாம், ஆகலின் அவன் இவ் வண்ணத்தன் இவ்வுருவனென இசைத்திட வொணுப் பரமனுவன் இது கருதி யன்றே பாம்பன் அடிகளாரும்,

"கங்கையென் சுதனே யென்னக் கார்த்திகை மதலா யென்னச்
சங்கரி மகனே யென்னச் சங்கரன் குருவே யென்ன
மங்கைய ரிருவோ ருந்தா மணத்திருத் தலைவா வென்னப்
புங்கவர் பரமா வென்னப் பொலிசிவ னடிபோற் றுவலே"

என்றருளிச் செய்ததூஉ மென்க.

5. பிள்ளைத் தமிழின் காலக் கணக்கு

காலமுங் கணக்கு நீத்தபிரான் கந்தவேள் என்பதைக் காட்டினும். மேலும் சோறும்.

"சதுர்யுக மவையிரண்டா யிரந்தான் சென்றுல்
சதுர்முகனுக் கொருதிவசந் தகைசால் வாணி
பதிமகிழுந் தினத்திலொரு பகலிற் றுனே
பதினுல்வ ரிந்திரர்தம் பதம்போ யிந்த

விதியடைவே பிரமரொரு கோடி துஞ்சில்
விண்டுவினுக் கொருபகலாம் விழியிற் றுஞ்சு
மதிதிருமா லொருகோடி மரிக்குங் கால
மலரளக மவிழ்த்துமையாண் முடிக்கும் நேரம் "

எனத் தேவிக்குக் காலக் கணக்கின்மை யுணர்த்தவந்த பாடலையும் நோக்குக ஆயின் ஐம்முகச்சிவனே அறுமுகங் கொண்டுச் செவ்வேட் பரமனெனத்திகழ் நலங்கருதாது கால வடைவு செப்புவது நறிதுகொல்? இஃது வினவயப்பட்டார் தம் வினையே யாமென்க என்னை?

"சேயினது கட்டளையினுலேயே நமன் பாவிகளை வாணுளில் நோய்களானும், மரித்தபின்றை நரகவேதனைகளானுந் தண்டிக்கின்றான். பங்கயத்தே படைத்தல் செய்கின்றான். கரியோன் காத்தல் செய்கின்றான். உருத்திரன் யாவற்றையும் ஒடுக்கல் செய்கின்றான். உயிர்களைப் படைப்பதும், துடைப்பதும் காலந் தான். அக்காலமோ நின்சேயின் வயத்துளதே"

என நுதல் விழிநாட்டத்து முதல்வன் முதல்விக்குரைத்தன ளெனக் கந்தபுராணங்கழறுமே! இது கண்டும் முருகற்குப் பிள்ளைத்தமிழ் இசைத்தல் இருவினைக் குழியுட் படுக்காதா? என்னை? பிள்ளைத்தமிழ் காலக்கணக் குடைத்தாகலினென்க. காப்பு இரண்டாந் திங்களினும், தால் ஐந்தாந் திங்களினும், சப்பாணி ஒன்பதாந் திங்களினும், முத்தம் பத்தாந் திங்களினும், அம்புலி பதினோராந் திங்களினும், வருகை பன்னிரண்டாந் திங்களினும், சிறுபறை இரண்டாம் ஆண்டினும், சிற்றில் மூன்றாம் ஆண்டினும், சிறுதேர் நான்காம் ஆண்டினும் நிகழ்வ என்பரே. இதனுனும் முருகற்கு பிள்ளைத்தமிழ் இசையாதென்க.

6. காப்புப் பருவம்

இச்சேய்க்கு எத்துன்பும் எய்தாவணம் காத்தியென மால், மலரோன், மகவான் முதலியோரை வழுத்துதலே காப்புப் பருவத்து நிகழ்வதாம், இஃது முருகற்கும் ஏற்புடைத்தெனல் மடமையாம். முருகற்கோரிடுக்கணும் எய்தும் என உன்னலே இருளின்பால் உய்ப்பது, அன்றியும், முற்கூறிய தேவர்கள் சூரபதுமனால் எய்திய இடர் களைதற்கு வந்த எம்பிரானன்றே அவன்? அவனுக்கு இடருறுமென்றும், அவ்விடருறு வண்ணங் காத்தற்கு அத்தேவர்கள் வலர் என்றும் கொண்டு அவர்தமை

வேண்டப்புகுதல் எழுத்தறியா முழு மகனொருவனைத் தொல் காப்பியங் கற்பிக்கும் ஆசிரியனும்படி வேண்டுதலையே பொருவும். இனி, அத்தேவர் திறந்தான் என்னை? "கொந்தவிழ் சரண் சரண் சரணெனக், கும்பிடும் புரந்தரன் பதிபெற" வேண்டி நின்றவனே. "வலிய நிகளத்தினெடு மறுகுசிறை பட்டொழிந்த" படைப்புக் கடவுள் இறைவன்பால் நடுங்கி நின்றவனே. திரு மருவு புயன் அடிபரவுஞ் செய்கையில் நின்றவனே. இவரோ எம்பிரானைக் காக்கவல்லார்?

இவ்வாறு, பிள்ளைத் தமிழில் முதற்கணுறும் காப்புப்பருவமே ஓவ்வாததாய்ப் பெரிதுங் கழிபடலானே 'முதற்கோணல் முட்டக் கோணல்' எனுமாறு ஏனைப் பருவங்களும் ஒழிந்துபடுவவாயின.

ஆகலின் காப்புப் பருவமொன்றே, கன்னித் தமிழ்மாலை கவினும் கந்தவேட்குப் பிள்ளைத் தமிழ் ஒவ்வாதென்பதைக் காட்டும் எறுழுடைச் சான்றும்.

7. சிவனே செவ்வேட் பரமன்.

சிவபிரானுக்கு யாது காரணம்பற்றிப் பிள்ளைத் தமிழ் ஏற்புடைத்தாகாதோ அதுபற்றியே சேய்ப்பரமனுக்கு மாகா தென்க. என்னை? "ஆதலினமது சத்தி யறுமுக னவனும் யாமும் பேதக மன்றால்" எனச் சிவனார் சொற்றதை முன்பே காட்டினும். அன்றியும் அப்பெருமானே கூறியதாக வரும் 'நன்முக மிருமுன் றுண்டா னமக்கவை தாமே கந்தன், தன்முக 'மாகி யுற்ற தாரகப் பிரம மாகி, முன்மொழிகின்ற நந்த மூவிரண் டெழுத்து மொன்று, யுன்மக னுமத் தோரா ரெழுத்தென வுற்ற வன்றே" எனுங் கந்த புராணத் திருப்பாடலும் இதனை மதுகை செய்யும். இலிங்க புராணம்,

"தூவி மாமயி லூர்பவன் சுடர்மதி யணிந்தோன்
தேவ யானையே திருந்திழை யுமையவ ளாமால்"

என வுரைப்பதும் கண்டுணர்க. இதனானன்றே, தவப் பெருஞ் செல்வராந் தாயுமானவ அடிகளாரும் "அஞ்சுமுகங் காட்டாம லாறுமுகங் காட்டவந்த செஞ்சரணச் சேவடியைச் சிந்தைவைப்ப தெந்நாளோ" என்றருளிச் செய்ததூஉ மென்க. இதனையே திருமந்திர முணர்த்துவதுங் கீழே காண்க.

"ஆறு முகத்தி லதிபதி நானென்றுங்
கூறு சமயக் குருபர னென்றுந்

தேறினர் தெற்குத் திருவம் பலத்துளே
வேறின்றி யண்ணல் விளங்கி நின்றானே."

இது நோக்கியன்றே. பாம்பன் அடிகளாரும்,

"ஆறுமுகப் படுமனநீ யைந்துமுகத் துடனிலவி
யழியா நூல்கள்
கூறுமுறைப் படியதன்முன் குறைவில்சிவ சத்தியொடுங்
குறைவொன்றின்றி
ஈறுமுத லொருவிடநின் றுருக்காட்ட லுதியுனை யீசன்
சேயென்
றூறில்லா துரைதிடுத லுபசார மல்லால்வே
றுழுங்குண் டோவே."

எனத் தம் திருத் தொடையலில் தெரித் தருளியதூஉ
மென்க.

8. பிள்ளைத் தமிழ் பாடிய புலவன்மார்

இதுகாறும் பிள்ளைத் தமிழ் ஆக்கிய புலவன்மார் பிழை செய்தனராலோ எனின் ஆமென்க. அருணலங்கைவரப் பெற்றாரும் பாடினரே யெனில் "மொழியு மடியார்கள் கோடி குறை கருதினும் வேறு முனிய அறியாத பெருமான் ஆகலின் முருகன் முனியான். முனியானே யாயினுங் குற்றப்படுவதே இச்செய்கை. இது பாடி முத்தி நலமுற்றோரிலராதலையும் நோக்குக. இதனை நோக்கியன்றோ,

"ஊட்டங் கடக்க வியலார் கருப்பத் துதித்திரண்டு
நாட்டந் திகழிக் குழவியைக் காவென நாரணன்மேற்
பாட்டம் பிறங்கப் படிப்பதைச் செவ்வேட் பரமனுக்கும்
கூட்டும் புலமையெம் போல்வர் கொளார்கதி குன்று
மென்றே."

எனப் பாம்பனடிகளாரும் அருளியுள்ளார்.

இங்ஙனம் பிள்ளைத் தமிழை நீக்கின் (கணபதி, சத்தி, முருகன், ஆய மூவருக்கு மட்டும்) இலக்கிய வளர்ச்சி குன்றுமே யெனில் குன்றாது. என்னை? ஏனைய பிரபந்த வகைகளுளவே. புதிதும் ஆக்கிக் கொளலாமே என்க. அன்றியும் பலதிறப் பா

வகைகளிருப்பவும் அவற்றில் கருத்தூன்றுது இந்நாட் புலவன்மார் புதினம் படைக்கும் (கல்வியறிவு குறைந்த) எழுத்தாளர்களாக மாறிவருகின்றனரே. இஃது தமிழன்னை செய்த தவக்குறைவே போலும்.

9. முடிப்புரை.

இன்னும் சிறுவனென் றிகழ்ந்து தேவர்கோன் செத்துப் பிழைத்ததும் பிரமன் சிறையில் பிணிப்புற்றதும் சூரன் செல்வமும் சுற்றமும் இழந்ததும் கண்டாம், ஆகலின் அவனைப் பிள்ளைமைத் தன்மையாம் அறியாமையில் வைத்துப் பாடும் பிள்ளைத் தமிழ் அவற்கேற்புடைத்தாகாததே யன்றி அதுபாடும் ஆசிரியன் மார்க்கும் வினைச்சுமை கூட்டும் வீண் செயலே யாமென்பது தெளிவாக அறிவுறுக்கப்பட்டது.

(இந்நெறி பற்றிய ஆய்வு பெரிதும் ஊக்குவித்தலுக் கேற்றது)

பொழிலன்பர்கள் சுவைக்க.

தமிழெழுத்து.

இப்பொழுது வழங்கிவரும் தமிழெழுத்துக்கள் கிரந்த எழுத் துக்களினின்று போந்தவை எனவும், கி. பி. முதலாவது நூற்றாண்டிற்கு முன்னர்த் தமிழில் எழுத்துக்களில்லை யெனவுங் கால்டுவேலர் கூறுவர். இக்கொள்கையுண்மை யாமாயின், தமிழ் நூற்களெல்லாம் முதலாவது நூற்றாண்டிற்குப் பின்னரே தோன்றியிருத்தல் வேண்டும். ஏனெனில். எழுத்தின்றேல் நூலு மில்லையாகும், ஆனால் தொல்காப்பியம் போன்றதமிழ் நூற்கள் கிறித்து பிறக்கப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னர்த் தோன் றியவென்பது இப்பொழுதுள்ள சிறந்த ஆராய்ச்சியாளர் கருத் தாதலின், தமிழ்எழுத்துககளும் தொல்காப்பியத்திற்கு முன்னரே தோன்றியிருத்தல் வேண்டும். தொல்காப்பியமே எழுத்து எழுதப்படுவது என்று கூறுமாயின், தமிழில் முற்காலத்து எழுத்தில்லையென்று கூறுவது பிழையாகும். கிரந்த எழுத்துக கள், வடநாட்டாரியர் தென்னாடுபோந்து வடமொழியை வழங்கு வதற்காகத் தமிழைப் பின்பற்றி ஆக்கிக்கொண்டவையாகும்.

— ந. மு. கோவிந்தராய நாட்டார் (பொ. து-1. பக். 53)

இளங்கோவின் புலமைச் செல்வம்

திரு. K. சோமசுந்தரம் பி. ஏ., பி. எல்., தஞ்சை.

சிறந்த செல்வநுகர்ச்சிக் கண்நின்று வயங்கித் தெளிவடைந்து தெய்வத் தன்மையுற்ற விழுத் தவமுதல்வராய இளங்கோ, விழுமியது பயக்க, சிலப்பதிகாரமெனும் காப்பியத்தை நுண்ணிய நூலமைதிகள் பல அமையுவண்ணம், ஒரு கலைக் கருவூலமாக யாத்தருளினர். பேராவியற்கையாகிய வேண்டாமை யன்ன விழுச் செல்வத்தைத் தனக்குரியதாகக் கொண்ட இளங்கோ, அதனை மேலும் அளிக்கவல்ல 'கேடில் விழுச் செல்வமாகிய' அகம் புறமென்னும் தமிழ்க் கல்வி மாட்சியால் பெறலரியதான கலைப்புலமையும் வாய்ந்து பொய்யா நாவு மெய்திய புலனழுக்கற்ற ஒளியராயும், உள்ளத்தைப் புலமறிந்து செலுத்தும் பேராண்மையாளராயும் விளங்கினர். நுண் மாண்நுழை புலம் விழையும் இவ்வொண்மையாளர், ஒழுக்க நெறிநின்று, மேன்மேலும் உலகியற்கையினைத் தெரிந்து அதன்வழி உணர்வியற்கைகளையும் தெளிந்து கொள்ளும் பெருந் திறனுற்றகாலை, பாட்டிசைக்கும் விழுப்பேறும், சுவைகனிந்த நடையழகும் நாநலனும் ஒருங்கே இயல்பாய்ப் பெற்று மெய்ம்மையிற் செலுத்தும் செவியறிவுறுத்துதலில் வல்ல புலமையராயினர். மெய்த்தெளிவும், உணர்வுபேராற்றலும் இளங்கோவிடத்து முயற்சியின்றி திகழ்ந்தமையான், அரும் பெறல் நூலாகிய இவரது சிலப்பதிகாரம், இயலழகும். சொற்பொருளழகும், நெஞ்சை யள்ளும் எழில் மலர்ச்சி கொண்டு இவருக்கு செவ்வியபுலமைப்புகழை அளித்தது இனிது புலப்படும்.

தமிழ் மணங்கமழும் சிலப்பதிகார மெனும் தீஞ்சுவைக் காப்பியத்தின் பொருண்மையும் பயனும் திறம்பட உணர்வதன் மூலம், இளங்கோவின் இலக்கிய இன்பம்தரும் புலமையியலையும். சொல்லாடும் முறைமையும் நன்கு அறிந்து கொள்ள ஏலும். மற்றும் வாழ்வியலின் உண்மையினை இளங்கோ நுனித்துணர்ந்து, பின் அதனைப் பிறரும் கூர்ந்துணரச் செய்யும் பான்மை போற்றற் குரித்து. சிலப்பதிகாரத்தின் கருத்தழகு கொண்ட முடிபுகளை அரசியல் பிழையாமை, பத்தினி வணக்கம் ஓம்பல், ஊழ்வினை வலியை உணர்தல் — இளங்கோ தன் புலமைச் செல்வத்தால் மக்கள் வழி விளங்கச் செய்து, எளியமொழி யமைப்பில், அவை

கலை பெருநலம் விளக்கும் பழக்க வழக்கங்களாக உயிர்ப்போடு இயங்கவைத்தார். இதனுலன்றே, இற்றை ஞான்றை மக்கள் அவற்றைக் கடைப்பிடித்துக் கையாண்டு வாழ்வில் இன்புறுதல் எளிதாயிற்று.

இளங்கோவின் புலமைச் செல்வத்தாலெழுந்த சிலப்பதிகாரம் முடிகெழு வேந்தர் மூவர்க்கும் உரியதான தமிழகத்துப் பேரிலக்கியக் காப்பியம். இது இயல் இசை நாடகம் என முத் தமிழ்ச் சுவைக்கும் திறம்பட அமைந்த முதனூல். இது இயலுட லுடன் இசை நாடக சிறகுகள் கொண்டு வீறுடன் எங்கும் இறை மணமும் பொலிவும் அன்பும் பரவ விண்ணில் பறந்தொளிரும் தெய்வீகப் புலமைத் தமிழ்க் கலையினைத் தன்னகத்தே கொண் டுள்ளது. மற்றும் இது வாழ்வினிலே கலையின்பம் உளதாதலை விளக்கும் பெற்றிமை யினையுமுடையது. இக்கலையின் கருப் பொருள், வாழ்வை. இறையின்ப ஊற்றாக ஆக்கு மென்பதூம் கருத்திற் பெரிதும் பதிக்கற்பாற்று. எனவே, இளங்கோவின் கவிப்புலமை. விண்ணையும் மண்ணையும் தன் இடமாகக்கொண்டு, சிலப்பதிகாரக் காவியத்தின் உள்ளத்தினின்று இருபேருலகையும் ஒளி மயமாக்கி, அவைதனிலே இன்பத்தமிழ் வெள்ளமாக அமைதி படர பாயவைத்து, இறவாத மங்கலத் தகுதியுடன் மக்கள் யாவரையும் இனிது வாழ்விக்க வல்ல தென்பது அறியப்படும்.

காப்பியத்திற்காக, இளங்கோ, எடுத்துக் கொண்ட காதற் சுவை கதை, கோவலன் கண்ணகி பற்றிய வாழ்வின் இன்ப துன்பங்களை எளிதில் எடுத்து இயம்ப வல்லது. இதனில் கோமர் (Homer) டான்தே (Dante) கொதே (Goethe) முதலியோரது காப்பியங்களில் காணப்படும் பரந்த சூழ்நிலை அமைப்பும், அகண்ட தத்துவமும். கட்டுக்கோப்புச் சிக்கலும், சம்பவங்களின் பின்னலும் முதலாயவைகளைக்காண அரிது. முக்குணப் போராட்ட மாய வாழ்வில், அறம் பொருளின்ப வழி களில் நேரும் இன்ப துன்ப இயல்புகளையும், இயற்கையின் தன்மையினையும். கூர்த்த அறிவிற் சிறந்த புலமையால் உணர்ந்த இளங்கோ, துன்பமற்றவர்க்கில்லாது இன்பமில்லை யாதல் பற்றி, துன்பத்தின் அழகினையும், துன்பத்தின் தூய்மையினையும், தம் கதையில், காப்பியக் கவிதை யழகோடு, அதற்கேற்ப இலக்கிய எழுச்சியும் இலக்கணக் கட்டுப்பாடும் கொண்டு சீரான கட்டுக் கோப்பு அமையவும், முத்தமிழையும், மூவேந்தரையும், மூன்று நாட்டியல்புகளையும் ஒருங்கினிது கூறி வாழ்வின் இலக்கியத்தைச் செழுமையுறத் துலக்கினார்.

இக்காப்பியக் கதை அமைப்பில் சகப்பிரியரது (Shakespeare) துன்பியல் நாடகங்களைப் போன்றுள்ளது. கதையின் பிறப்பு, வளர்ச்சி, பின் விளைவு ஆகியவற்றை எளிதில் உணரக் கூடிய வகையில், புகார்க் காண்டம், மதுரைக் காண்டம், வஞ்சிக் காண்டம் என்ற மூன்று பகுதிகளுள் சிலப்பதிகாரக் கதை அமைந்துள்ளது. இக்கதை, சோழ பாண்டிய சேர நாட்டுச் சரிதங்களோடு பின்னிக்கிடக்கின்ற நிலையை, இளங்கோ, தன் புலமை நலத்தால் காட்டுமுகத்தான், விரிவான உள்ளமும் உண்மை ஒளியினை நாடும் மனப்பான்மையும் நமக்குத் தோன்றச் செய்து, கதையின் பயனும் விளங்கும் அரசியலையும் ஒருவாறு விளங்க வைத்தார். இவ்வாறு கதையினை இலக்கியப் படைப்பாய் கவினுறசமைக்குங்காலை, தமிழகத்துப் பண்டைய நிகழ்ச்சிகள் யாவும் கவிதை வண்ணம் பெற்றுத்திகழவே, இளங்கோ ஒரு சரிதப் புலவராகவும், மெய்ஞ் ஞானத்தை அறிவியல் முறையில் வகைப்படுத்திய ஒரு சிறந்த விஞ்ஞானிபோலவும் காட்சியளிக்கின்றார்.

புனலோசை மிக்க புகார், மாளிகையும் சூளிகையும் சூழ்ந்த மதுரை, செம்மாந்து செழிப்பு கொழிக்கும் வஞ்சி யென்ற இம் மூன்று தலைநகரங்களிலும், அந்நகர்ப்புறங்களிலும் அடங்கும் நிகழ்ச்சிகளுக்குக் காண்டமென்றும், காப்பியக் கதை, இசைக் கவிதையழகுடன் முடிவாகும் பகுதிகளைக் காதை (கதை பொதி பாட்டு) யெனவும் வகைசெய்து முத்தமிழ் வடிவாம் இச்செவ்வறிவு நூலின் கட்டுக்கோப்பை, காண்பார்க்கு வியப்பாகவும், கருத்துக்கு விருந்தாகவும், நனிசீரியதாக அமைத்தார். மற்றும் ஒன்பான் சுவை பொதுவாக விரவிய இக்காப்பியத்தில், சிறப்பாக மூன்று காண்டங்களில் முறையே உவகை, அவலம், பெருமிதம் எனும் சுவைகளை நிலைக்களமாகவும் தோன்ற வைத்தார். தம் புலமைச் செறிவால், இளங்கோ, இக்கட்டுக்கோப்பில் காப்பிய இலக்கணத்தை நிறைவிக்கும் காதை வழி, சொல்லும் பொருளும் அணியும் மெய்ப்பாடும் இசையும் இன்பமும் தேக்கச் செய்து, ஐம்புல இன்பினுல் எழும் உடலுணர்ச்சி யின்பத்தை ஆன்மஒளி திகழும் கவிதை மூலம், ஞானப்பகுதிகிளக்கும் நாதமாக எழுப்பி, கவிதையையே ஒரு வழிபாடாகத் திகழ வைத்து, இம்மையையுங் காட்டி மறுமையையும் உணர்த்திவிடுகிறார். மற்றும் அறிவு வளர்ச்சிக்கேற்ப அன்பு நெறியும் உடனுக்குடன் உலகில் தழைக்க, யாதும் ஊரே, யாவரும் கேளிரெனும் சிந்தையராய், இளங்கோ, கலைச் சிறப்புகள் வழி கலையின் மகிழ்ச்சியினைத் தோற்றுவித்து, மக்கட் சமுதாயம், சமயப்பற்று, சாதிப்பற்று முதலியவைகளுக்கு

இடமின்றி முன்னேற்றமுற்று வளர்ந்துவந்த வகையும், எவ் வண்ணம், மக்கள் பல துறைகளிலும் சீருறச்செயலாற்றின முறைமையினையும் சித்தரித்து, வாழ்க்கையின் உண்மைகளைத் தெள்ளிதில் உணரவைத்தார்.

அறமாதிய முப்பொருளையும் தன்னகங் கொண்டு விளங்கும் இக்காப்பியத்தின்கண், இளங்கோ, தன் புலமைத் திறத்தால், முத்தமிழாகிய இயல் இசை நாடகம் என்பவைகளின் பண்புகளை, நீணிலத்தார் மனம் மகிழ்ந்து வியப்புறுமாறு, ததும்ப வைத்தார். உள்ளுந்தோறும் உணர்வுடையாருள்ளத்தில் பலபல நெகிழ்ச்சிகளையும், மெய்ப்பாடுகளையும் எழுப்பிப்பெருக்கிக் கொண்டிருக்கும் வகையில் ஒழுகிசை யகவற்பாவின் சொற் பொருட் சிறப் புணர்த்தும் ஓவியம் மூலம், பெரும்பாலும், இயற்றமிழின் சுவையினை உணர வைத்தார். இந்நூலின்கண் திகழும் அகவற்பா, வெண்பா, கலிப்பா யாவும் இயற்றமிழ் பகுதியைச் சார்ந்தவையாலும், அவைபெரிதும் இசையொடு விரைவிலே பாடப்பெறும் தன்மை வாய்ந்தவை என்பது அறிதற்பாலது. எழுத் தொலியை அடிப்படையாகக் கொண்டு பிறப்பதாயப் பண்ணுக்குக் காரணமாயுள்ள இனிய ஓசைவழி, ஆற்றுவரி, ஊசல வரி, கந்துக வரி, கானல் வரி, வேட்டு வரி முதலாய தெய்வத்துள்ளம் கவரும் பாக்கள் மூலம் சமூக வாழ்வினை அழகும், அணியும், இன்பமும் அன்புமெய்த வைத்தார். யாழுக்கு இசையப்பாடும் இப்பாக்கள் கவிதை நலங்கனிந்து ஓசை நயமும், செவ்விய உணர்ச்சிப் பெருக்கை அளிக்கும் பொருணயமும் பெற்று, இசைவு ஏற்பட இனிமை மிகுதியாகப் பயந்து, தாளத் திற்கு ஒத்த நடையோடு செல்லும் நீர்மையன, மற்றும் இத்திவ்விய பாக்கள் இசை யின்பத்தைப் பெருக்கி இறை யின்பத்தை எய்த வைக்கும் பான்மையன, சிந்திக்கின், இயற்கைக்கு அப்பாற்பட்ட நிகழ்ச்சிகளைத் திறம்பட இசைக்கலைச் செய்து முடிக்கும். இசைமுறை, இசைநலம் முதலியவற்றை மகிழ்ந்து விளக்கிச் செல்லும் இளங்கோவின் இசையறிவு, உலகினைப் பயன்பட்டு விளங்கவைக்கும் கவிதைப் புலமைக் கலையின் அடிப்படையில் இயங்குவதென்க.

இசைப் பாக்களுடன் நாடகத் தமிழின் உறுப்பாகிய உரைப் பாக்களும் தொடர்ந்து இக்காப்பியத்தில் வருகின்றதினுன், இதனை உரையிடப்பட்ட செய்யுள் என வழங்கப்படும். கூர்ந்து நோக்கின் நாடகப் பாகுபாடுகளும் இசை, நாட்டியம், பதினோ ராடல், இசைக் கருவிகளின் கூறுகள், பல்வகைக் கூத்துக்கள்,

இசை யாசிரியர். குழலோன், யாழாசிரியர் ஆகியவர்களின் அமைதி. அரங்கின் அமைதி, ஆடுகின்ற யமைதி, கூத்தியது இதன்கண் அருள், அழகு, அறிவு இன்பம் பயக்குமாறு விரிவாகக் கூறப்படுவதினுன், இக்காப்பியம் சுவை யுணர்வை வளர்த்து புலன்கள்வழி அறிவைப்புகட்டும் இன்னிசைக் கூத்தியல் நூலெனக் கூறுதல் சாலவும் பொருந்தும்.

பொய்யாச் செவ்வறிவு வாய்க்கப் பெற்ற இளங்கோ, 'அரசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற்றுவதும், உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தலும், ஊழ்வினையுறுத்து வந்தூட்டும்' என்பதாகிய உண்மைகளை மக்களுக்கு உணர்த்தி அறிவு கொளுத்தல் வேண்டி, இவற்றைப் பலவாற்ருல் சமய சந்தர்ப்பச் சூழ்நிலைகளிலும், நிகழ்ச்சிகளிலும் பொருந்திக் கோத்து அணி செய்துணர்த்தும் போக்கு, காப்பியத்தைப் புலமைக் கலையோடு யாக்கப் பெற்றிருத்தலைப் புலப்படுத்தும். வாழ்க்கை அரசியலையும் ஆட்சியியலையும் பொறுத்ததென இளங்கோ உளங்கொண்டு, வளையாத தென்னன் செங்கோல் வெருவிய செயலின் சுமையால் வளைந்து தாழ்வதையும் உணர்த்தி

மன்பதை காக்கும் நன்குடிப் பிறத்தல்
துன்பமல்லது தொழுதகவு இல்,

எனச் சுட்டிக் காட்டுவர். இவரது புலமையுள்ளம், பத்தினிப் பெண்டிரை வணங்குவோரை பெருந்தகையராக்கும் பெருந் தகைமையின் இயல்பினை எடுத்துக்காட்டும். காவியத்தின்கண் செறியும் நுட்பத்தினைத் தெள்ளிதில் விளக்கும் துன்பநுகர்ச்சி பெரும்பான்மையாக ஊழான் அமைந்ததாகையால், அதனைத் தப்புதலரிதென்ற உலகியல் புலமையோடு இளங்கோ ஆங்காங்கே, காப்பியத்தில், குறிப்பிட்டுச் செல்வதைத் தவிர, மேனுட்டு நாடகங்களில் காணப்படும் ஊழின் திடுக்கிடும் கொடுமை விளைவுகளையும் சீர்கேட்டைத்தரும் அதன் விளையாட்டி னியல்பையும் அகம் வெதும்பி எடுத்துக் கிளக்கவில்லை. ஊழ் வினையை யாழிசைமேல் வைத்து அதனுன் கோவலன் மாதவியைக் கூடியதும் பின்பு ஊடலால் பிரிந்ததும், பிரிவின் பயனுல் கோவலன் கண்ணகியொடு மதுரை சென்று ஆங்கு அரச ஆணைவழி கொலையுண்டதும், அக்கொலையால் கண்ணகி வீரக் கற்போடுதன்காதற் கேள்வன், கள்வனல்லன் என அரசவையில்

கடமையுணர்வால் நிலைநாட்டி, கணவனது புகழை நிலைநிறுத்திப் பின் தெய்வப் பெற்றியெய்தியதும், அதனுன் அவளது உருவ வழிபாட்டிற்காக இமயத்தினின்றும் எடுத்துவந்தகல், கனகவிசயர்தம் முடித்தலை நெறித்ததும் விதியின் வியக்கத்தக்க செய்தியென விளங்கத் தெருட்டி அருள்வாராயினர்.

ஊழை, வணங்கும் தெய்மெனக் கொண்டு வினை, செய்தவனையே அணுவும் தவருது சென்றடையும் அதன் முறைமையினை இளங்கோ இரக்கவுணர்வோடு கூறி (கோவலன் தன் முற்பிறப்பில் சிங்கபுரத்தில் பரதன் என்ற பெயரோடு சங்கம னென்னும் வணிகனை பகை மன்னனது ஒற்றனெனப்பழிசுமத்திக் கொலை செய்வித்த தீவினையே, நிழல் போல்விடாது மறுபிறப்பில் தொடர்ந்து உருவெடுத்து வந்து மதுரையில் கோவலனை கொல் வித்தது — சிலம்பு, கட்டுரைக் கதை, 138 —170) காப்பியத்தில் வினை, உருத்திவந்து கடைக் கூட்டும் வகையினையும். வினை விளை காலத்தின் பயனைபும் அமைத்து, கடந்த பிறப்பினையும், வரும் பிறப்பினையும். இப்பிறப்பின் நிலையைக் கொண்டே அறிய இயலு மென்பதை எளிய முறையில் நன்கு விளங்க வைத்தார், வினைப் பயன் தெய்வத்தை நிமித்த காரணமாகவும், ஊழைத் துணைக் காரணமாகக்கொண்டு எய்தப்படுதலால் வாழ்வு துன்பமயமாகா தெனவும், துன்பமுண்டேல் இன்பமுண்டெனவும் குறிக்கொண்டு, வாழ்வில் கலையை யமைத்து 'சிந்தை செல்லாச் சேண்நெடுந் தூரத்து, அந்தமில் இன்பமே முடிந்த முடிபென' அறவுரையினை யும் வழங்கி யருளியுள்ளார். மற்றும் துயர் விரவி வரும் துன்பத்தை மிகைப்படுத்தி இக்காப்பியத்தை முடிக்காது, இளங்கோ தம் புலமை வளத்தால், வஞ்சிக் காண்டத்தில் நிலையாமை முதலாய ஞானப் பகுதியுணர்த்தும் காஞ்சித் திணையினை உரைத்து, பாடாண் பகுதியிலும் காப்பியத்தைத் தெய்வப் பெற்றிச் சிறக்குமாறு இயற்றியது ஈண்டு நினைவு கூர்ந்து சற்றே மகிழற்பாலது.

காப்பியக் கட்டுக்கோப்பையும் பண்பையும் ஒற்றுமையிலே ஒளிர்ந்து சிறக்கச் செய்ய இளங்கே இயைத்துக் கொள்ளும் பாவிகங்கள் இவரது புலமையின் சிறப்பியலை எடுத்துக்காட்டா நிற்கும். இப்பாவிகங்கள் உண்மை நாடக இயலுக்கேற்ப, காப்பிய மக்களின் மனநிலைகளாலும், சொல்லாடலாலும், அளவ ளாவலாலும். அவர்களைப் பற்றிய பிறர் கூற்றுகளாலும் நன்கு விளங்குவனவாம், காப்பியக் கதைக்குட்பட்டு, அக்கதைப்

போக்கிலே, சொல்லோவிய முறையாலே காப்பிய மக்களை உயிரோவியமாக்கும் தன்மை, இளங்கோவுக்கே யுரிய சிறந்தமைந்த புலமைப் பண்பினை விளங்க வைக்கும். இதனுன் இவரது காப்பியக்கலை கனிபோல் பலப்பல சுவைகளைப் பயவா நிற்கும். செல்வத்தினும் செல்வாக்கினும் மிகச் சிறந்தவனுன கோவலனை 'இல்லோர் செம்மல்' 'மண்தேய்த்த புகழினன்' 'கருணை மறவன்,' 'செவ்வேள்,' என இளங்கோ நம் அகக்கண் முன் உருவாக்கி விடுகிருர். பொய்ச்சான்று கூறியவனைப் புடைத்துண்ணும் பூதமே கோவலனை 'நல்லுயிர்' என நற்சான்று அளித்ததையும் அவர் அறிவிப்பாராயினர். கோவலன் கண்ணகியைப் பிரிந்து போற்ரு வொழுக்கம் புரிந்து அதனுன் மனம் வருந்துங்காலை, அவன் துன்பத்தில் தூய்மைபெறும் நிலையை

'வறுமொழி யாளரோடு வம்பப் பரத்தரொடு
குறுமொழிக் கோட்டி நெடுநகை புக்குப்
பொச்சாப்பு உண்டு பொருளுரை யாளர்
நச்சுக் கொன்றேற்கும் நன்னெறி உண்டோ ?

என விளக்கவந்த இளங்கோ, துன்பத்திடைப்படும் கோவலனது உள்ளத்தின் அழகையும் துன்பத்தை மறைத்துப் படரும் கலையாத அமைதியையும் நம் மனம் பெருமிதமடைய தன் புலமை வன்மையால் காட்டியுள்ளார்.

இளங்கோ, கண்ணகியை 'ஈகைவான் கொடியன்னுள்' என தன் புலமை விளங்க சித்தரித்ததில் அவளது அன்பையும், உயர்வாய உளப்பாங்கினையும் அழகினையும் விளக்குகிருர். மற்றும்

'போதிலார் திருவினுள், புகழுடை வடிவென்றும்
தீதிலா வடமீனின் திறம்இவள் திறம்'

எனறதில், கண்ணகி திருமகள் வடிவுடையாள் எனக்கூறி உவமைக் குரியதாகிய அருந்ததியின் கற்பை கண்ணகியின் கற்புக்கு உவமையாகக் கூற இளங்கோ உளங்கொளாதிருந்தார். ஈண்டு உவமானமாக இருந்ததின் பெருமையை உவமேயமாக்கிக் குறைத்து, கதிரவனும், மதுராபதி யெனும் தெய்வமும் அஞ்சப் பெற்றவளாகிய கண்ணகியின் இறைப் பண்பினையும் ஏற்றத்தையும், காப்பியப் பின் பகுதியில் குறிப்பிட்டது இளங்கோவின்

கலை ஞானத்தின் மாட்சியினை இனிது விளங்க வைக்கும். இவ் வேற்றத்தை வலியுறுத்தும் வகையில் 'மழைக்குதவும் பெருங் கற்பின் மடவாளை, 'தென்தமிழ்ப் பாவை செய்த தவக்கொழுந்து' என்று சாலினி கூறுவதும், 'கற்புக் கடம்பூண்ட இத்தெய்வம்' என்று கவுந்தி அடிகள் புகல்வதும் கற்பொளியில் நிற்கும் கண்ணகியின் பண்பினை மெருகிடுவதாகு மென்க. மற்றும் கற்பொழுக்கத்தாலே கண்ணகி கற்பின் பிழம்பாய் பொற்புடைய தெய்வமானது. தனித்து வாழ்ந்து தெய்வத்தை எய்த நோற்கும் துறவியரது நிலையினும் சாலச் சிறந்ததென தன் சீரிய புலமையால் இளங்கோ நனிஆய்ந்து அறுதியிட்டுணர்த்திய மென்மை பெரிதும் போற்றற்பாற்று.

கோவலன் கண்ணகியின் மணவாழ்க்கையின் இன்பத்தைக் கூறுவதற்காக இளங்கோ,

'மாசறு பொன்னே, வலம்புரி முத்தே
காசறு விரையே' கரும்பே தேனே
அரும்பெறற் பாவாய், ஆருயிர் மருந்தே

மலையிடைப் பிறவா மணியே என்கோ
அலையிடைப் பிறவா அமிழ்தே என்கோ
யாழிடைப் பிறவா இசையே என்கோ

என எழிலொழுக எடுத்த எடுப்பு புத்துணர்வு நல்கும் சொல்லில் அகப்படாத அழகுப் புலமை கொண்டது பிரிவுத் துயரால் மெலிந்து வாட்டமுற்ற கண்ணகி, நாடகக் கணிகையாய மாதவியைத் துறந்து திரும்பிவந்த கணவனைக் கண்டதும் 'நலங்கேழ் முறுவல் நகைமுகம்' காட்டினள் என்று இளங்கோ குறிப்பாகச் சுருக்கமுறக் கூறி கண்ணகியின் இன்முகம் அன்பின் வழி பொறுமை மிகுந்த வலிநலத்தைக் கொண்டதெனக் காட்டியும் தன் கணவனையே திருத்திவிடும் அவளது தெய்வக்கற்பினைச் சுட்டியும் நம் கண்முன் கண்ணகியின் உருவழகினையும் உளவளத் தினையும் தோன்றச் செய்தார். 'முழங்குவாய் சாலினி' என்பாள் 'ஒரு மாமணியாய் உலகிற்கு ஓங்கிய திருமாமணி' எனவும் 'கொங்கச் செல்வி குடமலையாட்டி' எனவும் தன்னைப் புகழ்ந் தேத்திய உரைகளைக் கேட்ட கண்ணகி பெரிதும் நாணி, தன் கணவன்பின் ஒதுங்கியும் ஒடுங்கியும் நிற்கும் உருவத்தை

'பேதுறவு மொழிந்தனள் மூதறி வாட்டி யென்று
அரும்பெறற் கணவன் பெரும்புறத் தொடுங்கி
விருந்தின் மூரல் அரும்பினள் நிற்ப'

என்ற எளிய சொற்செட்டு சித்திரத்தில் இளங்கோ புலமை யழகொடு சமைத்தது அவளது மெல்லியலையும், கற்பின் நிற்கும் அமைதிப் பண்பையும், நாண மாதி நான்கும் அக்கற்பினைக் காக்கும் அழகு வகையும் எடுத்துக் காட்டா நிற்கும். மற்றும் கண்ணகி கோவலர்ச் சேரியில் அட்டில் சமைத்து, மண்ணக மடந்தை மயக்கொழிப்பவள் போன்று நீரால் நிலப்புழுதி நீக்கி, குமரி வாழையின் குருத்தம் விரித்து முறைப்படி தங்கணவனைத் தொழுது உணவு படைத்து அவன் உண்டபின் அடைக்காயும் சுருளும் அருளிப் பாரட்டிய இல்லற அன்புப்பணி உள்ளத்தை உருக்கி நெகிழ வைக்கும் வியத்தகு காட்சியாகும்

'கடிமலரங் கையிற் காதல னடிநீர்
சுடுமண் மண்டையில் தொழுதனள் மாற்றி
மண்ணக மடந்தையை மயக்கொழிப் பனள்போல்
தண்ணீர் தெளித்துத் தன்கையால் தடவிக்
குமரி வாழையின் குருத்தகம் விரித்தீங்கு
அமுத முண்க அடிகளீங் கென
★ ★ ★
உண்டினி திருந்த உயர் பேராளற்கு
அம்மென் திரையலோட டைக்காயீத்து'

(சிலம்பு ; கொலைக்களக் காதை)

என இளங்கோ சின்னஞ்சிறு புகைப்படமாக எழில் குன்றாது இனிமையுடன் கலைநலங் கனியப் பிடித்துக் காட்டிய புலமைத் திறன் இறும்பூது பயக்கும் பான்மையது.

கோவலன்மீது பழிசுமத்தும் பொற்கொல்லன் தோற்றத்தை
'மெய்ப்பைபுக்கு விலங்கு நடைச் செலவின்
கைக் கோல் கொல்லன்'

என நம் கண்ணெதிரே அவனது உருவத்தைக் காட்டி வஞ்சித்து வாழும் அகவொழுக்க பண்பையும் நடையும்

குறிப்பாக உணரவைத்து அவன் கண்பாற்பட்டார், மீனார், என்றுணர்த்த இளங்கோ 'கூற்றத் தூதன்' என்றது வியக்கத் தக்கதொன்று. தம் காப்பிய மக்கள் நல்லியல்பும் நற்பண்பும் வாய்ந்தவராயிருத்தல் வேண்டுமென்ற சீரிய காரணத்தால், அழகின்மையிலும் குற்றத்திலும் தெய்வ அழகு காணும் முயற்சியில், இவன் நுண்ணிய அறிவினனாகக் காணப்படுவதை இளங்கோ வியக்காமலில்லை. கவுந்தி அடிகள் தவவேலிக்குள்ளிருந்து நோற்கும் தூய்மையினையும் மாதவியின் கலை நுட்பத்தாலாய ஒழுக்கம் பயக்கும் விழுப்பத்தினையும், மாதரியின் செம்மை யுள்ளத்தினியல்பினையும், தென்னவன் நன்னர் நெறியினையும் மற்றும் ஏனைய காப்பியர் மாந்தர் - மடந்தையரது நற்பண்பாடுகளையும் முன்னிறுத்தி இளங்கோ மிக்கஉணர்வாட்சியுடைய புலமையால் வாழ்வியலையும் தத்துவத்தையும் தெள்ளிதே விள்ளலுற்றது புகழ்ச்சிக் குரியதாகும். கற்றோர்க்கு இதயங் களிக்கும் காப்பியச் சிறப்பனைத்தும் காப்பிய மக்களின் சிறப்பாகுமென்பது இளங்கோவின் சீரிய புலமைக் கோட்பாடாகும்.

பொழிலன்பர்கள் சுவைக்க.

தமிழ் மொழி தனி மொழி

மொழியாவது ஒருவர் தமது கருத்துக்களைப் பிறர்க்குப் புலனுமாறு கூறுதற்குக் கருவியா யிருப்பது. ஒரு சில மொழிகள் சில கருத்துக்களை வெளியிடுதற்குரிய சொற்களின்றிக் காணப்படும். தமிழ்மொழி அத்தகைய குறையின்றிக் கண்முதலிய பொறிகளாற் காணப்படும் பரிய பொருண் முதலாக நமது உள்ளத்துத் தோன்றும் உணர்ச்சி யிறுவாயாகிய அனைத்தையும் 'கண்முதற் புலனாற் காட்சியு மில்லோ' னாகிய இறைவனை யுள்ளிட்ட பொருள்களையுங் குறிக்கும் சொற்களையுடைய தாயிருக்கின்றது. இஃதொன்றே தமிழ்மொழி தனிமொழி என்பதை நிலை நிறுத்தும். — தி. க. உலகநாத பிள்ளை

(பொ. து. 1 பக். 18)

சென்ற இதழ்த் தொடர்ச்சி.

இருங்கோவேளும் நற்குடி வேளாளரும்

திரு. பி. இராமநாதன், பி, ஏ., பி. எல்.,

கோலார் மாவட்டம் இருக்கும் வட்டாரத்தில் இருங்கோவேள் ஆண்டு வந்திருக்கலாம் என்று கருத இடமுண்டு. கோலார் மாவட்டத்தில் பௌரிங்பெட் வட்டத்தின் தென்பகுதியில் பௌரிங்பெட் நகருக்குக் கிழக்கே ஏழுமைலில் இரயில் பாதையின் மேல் உள்ள உரிகம் என்ற ஊர் 13 ஆம் நூற்ருண்டுக் கல்வெட்டுக்களில் உரிகயம் என்று வழங்கப்பட்டது. அவ்வூரின் பெயர் "அரையம்" என்னும் ஊர்ப் பெயரோடு ஒப்புமையுடையதாயிருத்தல் குறிப்பிடத்தக்கது,

10. ஒரு இருங்கோவேளைக் கரிகாலன் வென்ருன் (பட்டினப்பாலை வரி 282: "இருங்கோவேள் மருங்குசாய"[13]), மற்ஞெருவனைத் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் வென்ருன் (அகம் 36 வரி 19, மதுரைக் காஞ்சி வரிகள் 128 129 இன் மேலான நச்சினர்க்கினியர் உரையும்). இவ்விருவரும் கபிலர் பாடிய இருங்கோவேளினும் வேருனவராக இருத்தல் வேண்டும்: "ஏனெனில் 'இருங்கோவேள்' என்னும் பெயர் ஒருவனுக்கு இடப்பட்டப் பெயராகத் தோன்றவில்லை. 'இருங்கோத்' தலைவர்கள் அனைவருக்கும் வழங்கிவந்த பொதுவான பட்டப் பெயரே அது எனலாம்"[14]

11. திருநெல்வேலி மாவட்டத்தில் சீவைகுண்டம், தூத்துக்குடி வட்டங்களில் கீழ்க் குறிப்பிட்ட ஊர்களில் நன்குடி

மைசூரிலுள்ள துமக்கூரு மாவட்டத்தில் பாவுகடா வட்டத்தில் கெஞ்செருவில்ஆண்ட இருங்கோளர்; 'இருங்கோளப்பாடி நாடு' போன்றவை) கொடும்பாளூர்க் கல்வெட்டுக்களில் தவிர வேறு எவ்விடத்திலும் 'இருக்குவேள்' என்ற சிதைவுப் பெயர் காணப்பட்டிலது, இருக்குவேதத்தோடு 'இருங்கோவேள்' எவ்வகையில் தொடர்புடையது என்பதும் எங்கும் விளக்கப்படவில்லை.

13. கீழ்வரும் 15ஆம் பத்தியைப் பார்க்கவும்,

14 கே. என். சிவராச பிள்ளை. "பழங்காலத் தமிழர்களின் காலவரையறை": சென்னைப் பல்கலைக் கழக வெளியீடு; 1932; பக்கம் 140.

வேளாளர் (அல்லது நற்குடி வேளாளர்)[15] என்னும் சாதியார் வாழ்ந்து வருகின்றனர் (சில ஆண்டுகளுக்கு முன்வரை அவ்விரு வட்டங்களும் சீவைகுண்டம் என்னும் பெயரில் ஒரே வட்டமாக இருந்தன) அச்சாதியார் மண உறவுகளைத் தங்கள் சாதிக்குள் தான் வைத்துக் கொள்வர். பேச்சு வழக்கில் செவளைப் பிள்ளைமார்[16] என அழைக்கப் பெறுவர். அண்மைக்காலம் வரை அச்சாதியின் தலைவர் தலைமுறை தலைமுறையாக இருங்கோ வேள்[17] என்னும் பட்டத்தைத் தாங்கிவந்தார். அவரே அச் சாதியினர் வாழும் ஊர்களில் மிகப்பெரியதான முடிவைத் தானேந்தலுக்குத் தலைமுறை தலைமுறையாகக் கிராம முனிசீபு ஆகவும் இருந்து வந்தார் ;—

1. முடிவைத் தானேந்தல்
2. செவலை
3. கொற்கை
4. செக்காரக்குடி

---

15. எட்கார் தர்கடன் ; "தென்னிந்தியச் சாதிகளும் குலங்களும்" 5ஆம் தொகுதி பக்கங்கள் 246—7 (1909) தெச். ஆர். பேட் : "திருநெல்வேலி மாவட்ட கெசட்டியர்" 1ஆம் பக்கம், சென்னை, 1917 பக்கங்கள் 140—1.

16. சுமார் 3 அல்லது 4 நூற்றாண்டுகளுக்கு முன்னர் இருந்துதான் வேளாளரும் பிற சாதியினரும் பிள்ளை என்ற பட்டப்பெயரைச் சூடலாயினர், அதற்கு முன் பார்ப்பனரே அப் பட்டத்தைப் பயன்படுத்தினர் : பார்க்க : J. H. நெல்சன் "மதுரை நாட்டுக் கைநூல்" 1868 ; இரண்டாம் பாகம், அத்தியாயம் (ii)

17. இருங்கோவேள் வழிவந்தோர் கொற்கையைச் சூழ்ந்த சிற்றூர்களில் வாழ்ந்து வருகின்றனர் என்று துரைசாமிப் பிள்ளை தம் புறநானூற்றுப் பதிப்பில் கூறுகிறார். 1969ஆம் ஆண்டு செப்டம்பரைஒட்டிவந்த "இந்தியாவில் மனிதன்" (Man in India) என்னும் தாளிகையில் பரதவரைப் பற்றி கிளாரன்சு மாலோனி (Clarence Malony) எழுதிய கட்டுரையில் குறிப்பிட்டிருப்பதைப் போல உலகிலேயே, தமிழகத்தில் மட்டுமே இனங்கள், குலங்கள் ஆகியவற்றின் வரலாறுகள் இற்றைக்கு இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட ஆண்டுகளுக்கு முன்பிருந்து தொடர்ந்து வருவதைக் காணலாம்.

5. சொக்கலிங்கபுரம்
6. தளவாய்புரம்
7. செட்டியூரணி
8. பொட்டலூரணி
9. வர்த்தக ரெட்டிப்பட்டி
10. சேர்ந்தைய பிள்ளை குடியிருப்பு (கூட்டுடன் காட்டைச் சேர்ந்த சிற்றூர்)
11. பாண்டியாபுரம் (வர்த்தக ரெட்டிப்பட்டி அருகில்)
12. ஏரல்
13. புதூர் (கட்டாலங் குளத்தைச் சேர்ந்த சிற்றூர்)
14. புதூர் (முடிவைத்தானேந்தலைச் சேர்ந்த சிற்றூர்)

(கபிலர் குறித்த, துவரையில் கழிந்த 49 தலை முறைகளையும் சேர்த்து) 201 ஆவது தலைமுறைப் பட்டம் என்று கூறப்பட்ட இருங்கோவேள் பட்டத்தைப் பெற்றவர் 1944 ஆம் ஆண்டில் இறந்தார். அவருக்கு ஒரு மகள் மட்டுமே உண்டு, அதற்குப் பின் சாதித்தலைவரை இருங்கோவேள் என முடிசூடும் வழக்கம் முடிவுற்றது. 201 ஆவது பட்டத்து இருங்கோவேளின் தம்பி கிராமமுன்சீப் வேலையில் மட்டும் 1944 முதல் தொடர்ந்து பணி செய்து, பின்னர் 1960 ஆம் ஆண்டில் இறந்தார்

12. ந. வே. வ. (அ), (ஆ) ஆகிய நூல்களில் இச்சாதியின் வரலாறு பலப்பல இயற்கைக்குப் பொருந்தாத புனைக்கதை நிகழ்ச்சிகளோடு கலந்து தரப்பட்டுள்ளது. அந்நூல்களில் கூறப்படும் வரலாறு அப்படிப்பட்ட நிகழ்ச்சிகளை ஒதுக்கிவிட்டுக் கீழே சுருக்கமாகத் தரப்பட்டுள்ளது. அந்நூல் கூறும் செய்திகளில் முன்பகுதியை வரலாறு என்று ஏற்றுக்கொள்ள முடியாது. எனினும் நற்குடி வேளாளர். செழுவையில் குடியேறிய காலத்திற்குப் பின்னுள்ள காலத்தைப் பற்றிய செய்திகள் வரலாற்றின் பாற்பட்டவையே. இப்பின்காலச் செய்திகள் நடந்த காலங்களைப் பற்றி இந்நூல் குறிப்பனவற்றில்மட்டும் மாற்றங்கள் தேவை என்பது பின்னர் விளக்கப்படும்.

13. "இந்தியாவின்மேல் படையெடுத்து வந்த பிற்கால ஆரியர்களுக்கு எதிராக அமைதிகாக்கக் கலியுகத் தொடக்கத்துக்கு 30 ஆண்டுகளுக்கு முன் (அதாவது கி. மு. 3132 இல்) பாண்டிய, சோழ, சேர மன்னர்கள் ஒன்று சேர்ந்து ... ...

(தொடரும்)

கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை.

[1860-ஆம் ஆண்டு XXI சட்டப்படி பதிவு செய்யப்பெற்றது]

தமிழ் மொழியின் தனிமை, தொன்மை எளிமை, ஆய சிறப்புக்களை இந்நாடும் பிறநாடும் அறிந்து போற்றவும். தமிழ் நாடும் தமிழரும் சிறப்பாகத் தமக்குரிய பண்பாடு நாகரிகம் முதலிய பல்வகைத் துறைகளிற் பாரினிற் சிறக்கவும். பொதுவாக ஒல்லும் வகையில் உலகநலம் பேணவும். தமிழ்த்தாயின் தண்ணருளால் 1911 மே 14-ஆம் நாள் நம் கரந்தைத் தமிழ்ச் சங்கம் நிறுவப்பெற்றது

நம் சங்கம் தமிழ் நலம் பேணும் தகுதிவாய்ந்த மொழித்துறை அறிஞர்களை அழைத்துச் சொற்பொழிவாற்றச் செய்தும், கட்டுரை வரையச்செய்தும். "தமிழ்ப் பொழில்" என்னும் திங்கள் வெளியீட்டைத் தோற்றுவித்து அதனைப் பேணிப் புரந்தும் வருகின்றது

தமிழ் நாட்டுத் திக்கற்ற பிள்ளைகள் சிலருக்கு ஒல்லுமளவிற்கு உண்டியும் உறையுளும் வழங்கிச் சிற்றுயிர்க் குற்ற துணையாம் கல்வியையும், உயிரினும் சிறந்ததாய் ஒழுக்கத்தையும் அடையத் தி[illegible]ற மாணவ நிலையம் நிறுவித் தொண்டாற்றி வருகின்றது.

மேலும், 1916-ஆம் ஆண்டில். சங்கம் நிறுவிய துங்கன் திரு. வே. இராதாகிருட்டினப் பிள்ளையவர்கள் பேரால் ஒரு தொடக்கப் பள்ளியையும், 1938 ஆம் ஆண்டு சங்க வெள்ளி விழா நாளில் கரந்தைப் புலவர்கல்லூரியையும் 1944-ஆம் ஆண்டில். தமிழைத் தம் உயிராகக்கொண்டு தமிழ் நலம் பேணிய தமிழவேள் திரு த. வே உமாமகேசுவரம் பிள்ளையவர்கள் பேரால் உயர்நிலைப் பள்ளியையும் நிறுவித் தொண்டுசெய்து வருகின்றது.

பத்தாயிரக்கணக்கான தமிழ். ஆங்கில பிறமொழி நூல்களைக் கொண்டு நூல் நிலையத்துடன் ஒரு படிப்பகமும் நடத்தி வருகிறது.

சங்கம் மேற்கொண்ட இப்பணிகள் பல்லாற்றானும் சிறக்க அன்பர்கள் உதவி செய்ய வேண்டுகிறோம்.

தமிழ்ப் பொழில்.

இத் திங்களிதழினை எல்லாப் பொது நூலகங்களும் பயன்படுத்தலாமென சென்னைப் பொது நூலக இயக்குநரின் 8—1—57-ம் நாளைய R. C 232 J 1/56 எண் உத்திரவில் மாவட்ட நூலக அதிகாரக் குழுவினர்க்கும். அவர்கள் வழி நகராட்சி, மாவட்டக் கழகங்களுக்கும் அறிவிக்கப்பட்டிருக்கிறது (Proceedings R O. C. No. 232 J 1/56 dated [illegible]—1—57 of the Director of Public Libraries, Madras)

நூலகங்கள் நடத்திவரும் திருக்கோயில்களின் மேலதிகாரிகள். அவைகளின் நிதி நிலைமை இடந்தருமாயின், "தமிழ்ப் பொழில்" இதழ்க்கு உறுப்பினராகலாமென. சென்னை இந்து சமய, அறநிலைய மாநில ஆணையர் 7—11—56ம் நாளைய L. Dis. 29226/56 எண் உத்திரவில் அறிவிக்கப்பட்டிருக்கிறது. L Dis. 29226/56 dated 7—11—56 of the Commissioner for Hindu Religious and Charitable Endowments (Administration) Department, Madras.

Regd. No. M 8474.

விற்பனைக்குக் கிடைக்கும் நூல்கள்.

தொல்-சொல்—தெய்வச்சிலையார் உரை	...	2—50
நெல்லை வருக்கக் கோவை	...	0—12
சித்தரந்தாதி	...	0—12
சுருதி வீணை	...	0—25
தமிழரசி குறவஞ்சி	...	0—62
பரத சாத்திரம்	...	1—60
கவியரசு வீணைவு மலர்	...	1—00
சிவமும் செந்தமிழும்	...	0—25
சிலப்பதிகாரம்—புகார்க்காண்டம்	..	0—50
Garland of Tamil Poetry	...	2—00
கச்சிக் கலம்பகம்—(பூண்டி அரங்கநாத முதலியார்)	...	0—50
அப்பர் புகழ்மாலை	...	0—25
சுந்தரர் புகழ்மாலை	...	0—25
பாரதசார வெண்பா	...	1—00
தொல்-பொதுப்பாயிரம் உரை	...	0—12
யவன மஞ்சரி (த. இராமநாத பிள்ளை, B.A., யாழ்ப்பாணம்)	...	1—50
இந்தியத் தல யாத்திரை (T. B தாஸ் ராவ், B.A.,)	..	1—25
புலவராற்றுப்படை (அமிர்தம் சுந்தரநாத பிள்ளை)	...	0—25
கரந்தைக் கட்டுரைக் கோவை	...	1—75
தமிழ்ப் பொழில் துணர்கள் 1, 4, 5, 6, 8, 29, 31, 32, 34, துணர் ஒன்றுக்கு	...	6—00

கரந்தைத் தமிழ்ச் சங்கத்திற்கு அளிக்கப்பெறும் நன்கொடைகள் வருமான வரிச் சட்டப் பிரிவு 15-B யின்படி வருமான வரிவிதிப்பிலிருந்து விலக்கப்பெற்றிருக்கின்றனவென்று சென்னை வருமானவரிக் கமிஷனர் அவர்கள் தமது 13-1-60 ஆம் நாளைய சி நெ 212 (27) 58 உத்திரவில் அறிவித்திருக்கிறார்கள்.

தமிழ்ப் பொழிலின் கையொப்பம்.

	உள் நாடு.	மலேயா, இலங்கை முதலிய வெளி நாடுகள்.
ஆண்டு வரி	5—00	6—00

CONNEMARA PUBLIC LIBRARY
11 MAR 1973
MADRAS

ஆசிரியரும், வெளியிடுபவரும்–திரு. செ. தனக்கோடி, பி.ஏ., தலைவர், கரந்தைத் தமிழ்ச் சங்கம், கருந்திட்டைக்குடி, தஞ்சாவூர்-2; அச்சிடுபவர். திரு. V. M. O. தங்கவேலு ஞாயிறு அச்சகம், 1658, கரந்தை, தஞ்சாவூர்-2.